சிவமயம்

News-
paper in Ceylon
P. M. G. NO. H. A
59/300 of 1939.

# இந்துசாதனம்

விரோதி வருஷம் (1889) ஆவணி மாதம் 29-ந்உ ஆரம்பமானது

செவ்வாய் வெள்ளிதோறும் வெளிவருவது

மாசில் வீணையும் மாலை மதியமும், வீசுதென்றலும் வீங்கிளவேனிலும், மூசுவண்டறை பொய்கையும் போன்றதே, ஈசனெந்தை யிணையடி நீழலே.

புத். ருகூ] யாழ்ப்பாணம் — சர்வசித்து ஹூ ஆடி மீ கக உ (1947 ஜூலை 29 செவ்வாய்க்கிழமை) [இல நகூ

## அமைதிச் செல்வம்

(இராமசாமி)

வார்த்தைகளைக் காட்டிலும் அமைதி அதிக வல்லமை வாய்ந்தது. மிகச் சிலரே அமைதியின் ஆற்றலை அறிந்துளர். நாம் வார்த்தையாடுவதற்கு அதிகமாக வழக்கப்பட்டிருப்பதால் மௌனத்தின் முக்கியத்தை நன்கு உணராதிருக்கிறோம். சக்திவாய்ந்த இச்சாந்தத்திற்குப் பேராற்றலுண்டு. முன்னைய முனிபுங்கவரும், ஞானிகளும் சாந்தத்தின் சாந்நித்யத்தில் திளைத்தனர். பேரானந்தத்தைப் பிரியமுடன் பருகிப் பரவசமடைந்தனர். அதை உலகிற்கு வழங்குவதற்கு அவர்கள் கையாண்ட அடக்கத்தின் அமைப்பே புகட்டுகின்றது.

எண்ணங்கள் சொற்களாலன்றிச் சலனமற்ற வேறு முறையிலும் பிறருக்கு அறிவிக்கப்படலாம். இதய உணர்ச்சிகளைப் பேச்சைக் காட்டிலும் வலிவுடன் வழங்கப்படச் செய்யவுங் கூடும். இங்ஙனங் கூறுதலால் உரையாடல் உபயோகமற்றதென்றோ, பிசகானதென்றோ பகரப்பட்டதாக நினைத்தல் கூடாது.

சாதாரணமாக எண்ணத்தை எளிதில் வெளிப்படுத்த இயலும் கருவியே மொழி. வரம்புகடந்த வகையில் சம்பாஷிப்பதாலும், பயனை நோக்காது பேச்சாடியபடி பலகாலத்தைக் கழிப்பதாலும் வீண் வார்த்தைகட்கு அடிமையாய்விட்டோம். இதனின்றும் விடுதலையடைய முயற்சிப்பது முக்கியமான கடமை. உயர்ந்த மனிதர்கள் நிசப்தத்திலும், அமைதியிலும்தான் சிறந்த தத்துவங்களைக் கண்டுளர்,

பேசுங்கால் நினைப்பது அரிய காரியம். இரண்டும் வேறுபட்ட செயல்கள், சிந்திப்பது மிகுதியாகவும் செப்புவது சிறிதாகவுமிருந்தால் கூறும் அக்குறுகிய வார்த்தைகளுக்கு வரம்பு கடந்த மதிப்புக் கிடைக்கும்.

தற்போது நாள்தோறும் நாற்புறமும் பேரிரைச்சலும் பேரொலியும் வானைப்பிளக்கும்போதுதான் அமைதியின் அருமையை எண்ணுகிறோம், வானொலிக் கருவி நாள் முழுவதும் ஒலி உண்டாக்குகின்றது. போரின் இரைச்சல் இடைவிடின்றி முழங்குகின்றது. அரசியல் வாதிகளின் பேச்சிற்கும், பிரசாரகர்களின் பிரசங்கத்திற்கும் ஒழிவென்பதேயில்லை! நம் விழிப்பு நேரத்தில் ஒரு கணமாவது சலனமற்றிருக்காதா! அமைதி நிலவாதா! என ஏங்குகிறோம்.

மூன்றும் துறந்து மோனநிலையெய்த வனத்திற்புக்க முனிவர்க்குமட்டும் அமைதி அவசியம் என்பதுமட்டுமல்ல! ஏன், உலகில் உழன்று வரும் மனிதருக்கும் அச்சாந்தம் அவசியமானதே. அந்த நேரம்—அம்மகளுக்கு ஒப்பற்ற ஓய்வினை நல்குகின்றது. அதுகாலை தன் அறிவுச்சுடரை அகத்தே புகுத்தி அவ்வமைதியில் திளைக்கின்றான். இதயத்தில் இருளகன்று இன்பம் இன்னிசை யெழுப்புகின்றது சமநிலையினின்றிழிந்த மனம் நடுநிலைக்கு நெருங்கி அனுகூலர்க்கும் பொலிவை வழங்குகின்றது.

அந்த மோன நேரத்தில் பற்றற்ற மனப்பான்மை பெறுவது எளிது. காணப்படும் பொருள்களின் உள்ளியல்பையும் புலன்காட்சிக்கு அப்பாற்பட்டு அருவாய் விளங்கும் ஆண்டவனை வழுத்தி அகத்தே ஆனந்த மெய்தலாம்.

குறிப்பாக இக்காரணங்கொண்டே இடைவிடா உழைப்பில் மாண்டும் ஈடுபட்டிருக்கும் காந்தி அடிகளும் திங்களுக்கு நான்குமுறை மௌனத்தை மேற்கொள்ளுகிறார். இப்பெரிய மகானுக்கே இதனை இன்றியமையாததானால் எளியோராய நமக்கு எத்துணை அவசியம்? தினமும் சிறிது நேரம் மௌனத்தைக் கைக்கொண்டாலே அதன் பரந்த நன்மையை அறியலாகும்.

மக்கள் நிறைந்த கூட்டத்தில் அனுஷ்டிக்கப்படும் அமைதி எத்தகைய ஆற்றலும் பெற்றியும் வாய்ந்தது என்பது இயம்பவொண்ணற்பாலதன்று. நூற்றுக்கணக்கான மக்கள் குழுமி அமைவுற்றிருக்குங்காலை அவ்விடம் ஆண்டவனின் அருட்சன்னிதானமாக மிளிரும், அவண் பொருந்தியுள்ளோர் அனைவரும் குறிப்பிட்ட விஷயத்தைப்பற்றித் தியானித்தால்—உதாரணமாக உலகமுன்னேற்றத்தைக் குறித்துப் பிரார்த்தித்தால் அது ஆத்மீக சக்தியாக மாறும், அரவிந்தர் ஆச்சிரமத்தில் மாலைப்பொழுதில் ஆச்சிரமவாசிகளும் வரும் மற்றோரும் ஆங்குள்ள பூஞ்சோலையில் கூடுகின்றனர். நிசப்தமாகப் பத்து நிமிடங்கள் கழிக்கப்படுகின்றது ஓர் உயிரும் நகர்வதில்லை, அசைவதில்லை. ஒரே அமைதி. தூரத்தேயுள்ள கடலொலி மெதுவாகக் காதில் மோதுகின்றது. அவ்வளவு நிசப்தம். ஆடாது அசையாது மனமொடுங்கி நிற்கும் உயிர்களின் சேர்க்கை ஆத்மீக சக்தியை வாரி வீசுகின்றது அந்தச் சாந்தநேரத்தில் ஆழ்ந்த பாரமார்த்திகக் கிரணங்கள் இதயங்களிற் குடிகொள்ள விழைந்து நெருங்குகின்றன. கண்டு உணர்ந்து நினைத்தோர்க்கு அக்காட்சியின் மாட்சி கலங்கரை விளக்கமாகக் காணக்கிடக்கின்றது.

இதயமே இறைவனை நாடச்செய்யும் அருட்சன்னிதானம்தான் மனிதனை அமரனாக்குவதா? ஆம், அத்தகைய சாலச்சிறந்த காலங்களில்தான் உலகை உய்விக்கவந்த உத்தமர்கள் தத்துவங்களைக் கண்டனர். சிறந்த வாணர்கள் அந்நேரங்களில் சொற்சுவையும் பொருட்பொலியும் கொண்ட இலக்கியங்களை இயற்றி ஈந்தார்கள். பரம தியாகியான பாலகங்காதரத் திலகர் "ஆகமமெழுந்த ஆர்க்டிக் நாடு" எனும் ஆராய்ச்சிமிக்க நூல் எழுதிய இடம் எது? சந்தடியற்ற, சலனமற்ற அமைதி குடிகொண்ட சிறைக்கூடத்தில்தான் அது தீட்டப்பட்டது.

தனிப்பட்ட மனிதனுக்கும் சமூகத்திற்கும், மனித சமுதாயம் அனைத்திற்குமே மௌன முறை அவசியமாகும். நம் புனித ஆலயங்களில் குறிப்பிட்ட [illegible]

### பிரார்த்தனை

வரும்போம் என்னும் இருநிலையை மன்னுது ஓருதன்மைத்தாகிக்
கரும்போ தேனோ, முக்கனியோ என்ன வென்னுட் கலந்துநலம்
தரும்பேரின்பப் பொருளே!நின் தன்னை நினைந்து நெக்குருகேன்
இரும்போ, கல்லோ, மரமோஎன் இதயம் யாதென்று அறியேனே!

உய்யும்படிக்குஉன் திருக்கருணை ஒன்றைக்கொடுத்தால் உடையாய்! வாழும்
பொய்யும் அவாவும் அழுக்காறும் புரைபட்டோடும்; நன்னெறியாம்
மெய்யும் அறிவும் பெறும்பேறும் விளக்கும்; எனக்குஉன் அடியார்பால்
செய்யும் பணியும் கைகூடும் சிந்தைத் துயரம் தீர்ந்திடுமே.

—தாயுமானவர்.

## அரிசி அளவு

### அதிகரிக்கப்படமாட்டாது!

கூடிய சீக்கிரத்தில் இப்போதுள்ள அரிசி விநியோக அளவு, 1 படியிலிருந்து 1½ அல்லது 2 படியாகலாம் என்று முன்னர் எதிர்பார்க்கப்பட்டது, ஆனால் எண்ணியபடி அந்த விநியோக அளவு அதிகரிக்கப்படமாட்டாது என்று இப்போது தெரிகிறது.

சர்வதேச உணவுச் சபையில் இதுவரை அங்கத்துவம் வகித்து வந்த பிரேஸில் நாடு, இப்போது அச்சபையை விட்டு விலகிவிட்டது, ஆகவே, அங்கிருந்து எமக்கு வரவேண்டிய 21,000 தொன் அரிசி இனி இலங்கைக்குக் கிடைக்கமாட்டாது என்று உணவுப்பகுதி யதிகாரி திரு ஆள்வாப்பிள்ளை ஓர் பத்திரிகை நிருபர்க்குக் கூறினர்.

பிரேஸில் சர்வதேச உணவுச்சபையில் இருந்து விலகி, தான் விரும்பிய நாடுகளுக்கு தான் நிர்ணயிக்கும் விலைக்கு விற்கும்.

இப்படியாக இழந்துபோன 21,000 தொன் அரிசியையும் பர்மாவிலிருந்து

## 60 லட்சம் ரூபா!

### உணவு விநியோகத்தால் நட்டம்

புற நாடுகளில் இருந்துவரும் சீனியின் விலை இப்போது அதிகரித்துவிட்டபோதிலும், அரசாங்கம் அந்த விலை அதிகரிப்பைத் தானே தாங்கிக் கொள்ள நிச்சயித்திருக்கிறது.

அரிசி விலையும், மா விலையும் இனி அதிகரித்தாலும், அரசாங்கம்தானே அந்த அதிகரிப்பையும் ஏற்குமாம்.

இந்த ஆண்டின் முதல் மூன்று மாதத்துக்கிடையிலும், அரிசி, மா, முதலிய உணவுப்பொருள்களை வாங்கி விநியோகம் செய்ததால், 60 லட்சம் ரூபா நட்டம் அரசாங்கத்துக்கு ஏற்பட்டிருக்கிறது.

பெற இலங்கையரசாங்கம் முயற்சி செய்யும் ஆனல் அந்த முயற்சி அநுகூலமளிக்குமோ என்பது சந்தேகத்துக்கிடமாக இருக்கிறது.

இப்படியாக ஏற்பட்டுள்ள நிலையில் அரிசி விநியோக அளவை அதிகரிப்பது முடியாது என்று தெரிகிறது.

## வெளியே போ!

### ஆசியாவில் அந்நியர்க்கு வேலையில்லை!

இந்தோனேஷியாவிலே, முன்செய்து கொண்ட உடம்படிக்கைகளை மீறி, ஒல்லாந்தர் செய்துவரும் கிருத்திரமங்களை விளக்க, இந்தோனேஷிய தலைவர் டக்ரர் சுல்தான் ஷாரீர் இந்தியாவுக்கு வந்திருக்கிறார். அவர் பண்டிதர் நேருவைக் கண்டு, இந்தோனேஷியாவில் உள்ள நிலைமையை விளக்குகிறார்.

இதன்பின் பண்டிதர் நேரு ஓர் அறிக்கை விடுத்திருக்கிறார். அந்த அறிக்கையில், அவர் ஒல்லாந்தரின் அதிகார வெறியைக் கண்டித்துப் பின் வருமாறு கூறுகிறார்,

"ஆசியாக் கண்டத்திலே, தனது படைகளை வைத்துக்கொண்டு ஆக்கிரமிப்புச்செய்வதற்கு எந்த ஐரோப்பிய வல்லரசுக்காவது, வேறெந்த அந்நிய நாட்டுக்காவது உரிமையில்லை. ஆசிய மண்ணிலே அந்நியப் படைகள் நிற்பது, ஆசிய மக்களின் சுயமரியாதைக்கும், கௌரவத்துக்கும் ஹானி விளைப்பதாகும் இந்தச் சந்தர்ப்பத்திலே, ஐக்கியதேச ஸ்தாபனம் என்னசெய்யப்போகின்றது? இதனைப் பார்த்துக் கொண்டு கண்மூடியிருந்தால், 'ஐக்கியதேச ஸ்தாபனம் இறந்துபோவதே மேல். ஒல்லாந்தருடைய அநியாயமான ஆக்கிரமிப்பைத் தடுப்பதற்கு, இந்தியா இந்தோனேஷியாவுக்குச் சகல விதமான உதவிகளையும் செய்யும்."

ஆச்சர்ய வல்லமை வாய்ந்த மௌன மோனத்தைக் கொண்டு, தீவிரமாகத் தியானித்தால் உலகிலேயே ஒளி வீசச்செய்யலாம்; விவேகாநந்தசுவாமிகள் "குகையில் மறைந்து கடுந்தவமியற்றும் ஞானியின் அருளுபதேசங்கள் அவசிறந்த ஞான்றும் ஆலயமாக்கப் பரந்து விரிந்துசென்று மனித சமூகத்தினைத் தாக்கும்" எனக் கூறியுள்ளார். இவ் வார்த்தைத் தொடர்கள் மறைமுகமாக மனிதனுக்கு அமைதிச் செல்வத்தின் இயல்பை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்க அந்தணர் வானவ ரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல் லாம்அர னாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே.


# இந்து சாதனம்.

யாழ்ப்பாணம், சர்வசித்துஹூ ஆடிமீ கரு உ செவ்வாய்க்கிழமை


## பிரதிநிதித்துவத்திற்கு முன்னிட்டு நிற்போர்

இலங்கைப் புதிய பாராளு மன்றத்திற் பிரதிநிதிகளாய் வருதற்கு அபேட்சகராக வுள்ளவர்கள், தங்கள் பெயரைப் பதிவு செய்யும்படி சமர்ப்பித்த தினமாகிய சென்ற சனிக்கிழமை (26-7-47) இலங்கை முழுவதிலும் 360 அபேட்சகர்கள் பிரதிநிதியாக வருதற்கு முன்னிட்டு நிற்கின்றன ரென்பது அறிதலாயிற்று. புத்தளப் பகுதிப் பிரதிநிதியாக வருதற்கு முற்பட்டுநிற்கும் மிஸ்ரர் H. S. இஸ்மெயில் என்பவருக்கு மாத்திரம் எதிரிடையாக எவரும் வந்திலராதலின், இவரையே இலங்கைப் புதிய பாராளு மன்றத்தின் முதன்முத லேற்பட்ட அங்கத்தவ ரெனலாம்; புத்தளப் பகுதி போல் இலங்கையின் ஏனைய பாகங்கட்கும் ஏற்படுமானால், வரும் நன்மையைச் சொல்லவும் வேண்டுமா?

இப்பொழுது தேசாதிபதியோடு சேர்ந்து பரிபாலனம் நடத்தும் அரசாங்கசபை மந்திரிமார் எழுவருக்கும் எதிரிடையான அபேட்சகர்கள் முற்பட்டு நிற்கின்றனர்; இந்த அபேட்சகர்களுள் ஒரு கட்சியையும் தாம் சேர்ந்தவர்கள ரல்ல ரென்று சொல்லும் 135 அபேட்சகர்களொழிய ஏனையோ ரெல்லாரும் ஒவ்வொரு கட்சியைச் சேர்ந்தவர்க ளாவர்; ஐக்கிய தேசியக் கட்சியைச் சேர்ந்த அபேட்சகர்கள் 100 பேர் வரையிலாவர்; 30 பேர் வரையில் சமசமாஜக் கட்சியைச் சேர்ந்தவர்களாம்; 10 பேர் போல்ஷெவிக் - லெனினிற்ஸ் கொள்கை பூண்டவர்களாம்; 14 பேர் சமதர்மக் கட்சியினராம்; 9 பேர் தமிழ்க் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர்களாம்; முற்பட்டு நிற்போருள் மூவர் பெண்பாலினராவர். ஒரு கட்சியையுஞ் சாராத அபேட்சகர்க ளெனச் சொல்லப்படுவோருள்ளும் அநேகர் ஒவ்வொரு கட்சியி னிடத்து அபிமானம் பூண் டுள்ளவராவர்: இந்த வட இலங்கையிலும் ஒரு கட்சியையுஞ் சாராத அபேட்சகர்கள் சில ருளர்.

புத்தளப் பகுதியின் அபேட்சகராகிய மிஸ்ரர். இஸ்மெயில் என்பவர் தவிர, ஏனைய 94 ஸ்தானங்கட்கு 360 அபேட்சகர்கள் முன்னிட்டு நிற்கும்போது, நடக்க விருக்கும் தேர்தல் வெகு ஊக்கத்தோடும் ஆர்வத்தோடும் பரஸ்பரம் எதிரிடையோடும் இவைக ளெல்லாவற்றைக் காட்டிலும் அதிக பணச்செலவு சிரமமென்னு மிவைகளோடும் நடைபெறு மென்பது யூகித்தறியக் கிடக்கின்றது; இம்முறை நிகழவிருக்குந் தேர்தலில், தேர்தற்றினம் அந்த அந்தத் தானங்களுக்குத் தக்கபடி வெவ்வேறு தினங்கள் விதிக்கப்பட்டுள்ளன; அவ்வளவோ டமையாது ஒவ்வொரு தானங்களிலும் போய்ப் போய் வாக்குரிமை சொல்லுவோரின் தொகையைக் கட்டுப்படுத்தி, வாக்குரிமை சொல்வதற்காகிய தானங்கள் பலவாக்கப்பட்டுள்ளன; இவைகளெல்லாம் தேர்தற் காலத்தில் அதிக சங்கடங்கள் நேரவொட்டாது தடுத்தற்கான ஒழுங்குகளென்பது மெய்; ஆனாலும் தேர்தற் றினத்திலும் அதற்கு முந்தியும் பிந்தியும் எவ்வகையான குழப்பமு மில்லாமல், சமாதான முறையில் இந்தப் பெரிய தேர்தல்கள் நிறைவேறுமானால், அதுவே இலங்கை மக்களுக்கும், அபேட்சகர்களுள் அநுகூல மடைவோர் பிரதிகூல மடைவோ ரென்னும் பேதமின்றி எல்லார்க்கும் பெருமை தருவதோடு, இலங்கைமக்கள் சுயராச்சியத்திற்கு அருகராவ ரென்பதையும் உலகிலுள்ள ஏனையோர்க்கு விளங்கவைக்கும்.

## சைவப் பிரசங்கம்

நிகழும் சர்வசித்து வருஷம்ஆடி மாதம் கூ ந் திகதி (25-7-47) சுந்தரமூர்த்தி நாயனார் குருபூசைத் தினமாகிய வெள்ளிக்கிழமையிரவு 7 மணியளவில் யாழ்ப்பாணம் சைவபரிபாலனசபை ஆதரவில் யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரித் தமிழ் வித்தியாசாலை மண்டபத்தில் வித்துவான் திரு ந. சுப்பையபிள்ளை யவர்கள்தலைமையில், தருமபுர ஆதீனத்தில் சித்தாந்த சாத்திரங் கற்ற புராணப் பிரசாரகர் சரவணை திரு. வே சோமசுந்தரம் பிள்ளையவர்கள் சுந்தரமூர்த்தி நாயனார் என்னும் பொருள்பற்றி ஓர் சிறந்த பிரசங்கஞ் செய்தனர். பிரசாரகரவர்கள் மாகேசுவரபூசை மகத்துவத்தைப்பற்றியும், சுந்தரமூர்த்திசுவாமிகள் அவதாரம் அவரைச் சிவபெருமான் தடுத்தாட்கொண்டமை, அவர் திருத்தொண்டத்தொகை பாடிய வரலாறு, அவருக்குச் சிவபெருமான் உருவத்திருமேனி தாங்கி அநுக்கிரகஞ் செய்தமை, முதலைவாய்ப் பிள்ளையை அழைத்தமை முதலிய அற்புதங்களைப்பற்றிவிரிவாகப் பேசினர்.

சென்னை மாகாணத்தில் 'பொட்டுக்கட்டும்'' தேவதாஸி முறையை ஒழிப்பதற்குச் சென்னை அரசாங்கம் தீர்மானித்திருக்கிறது.

அமெரிக்க பாராளுமன்றத்தில் அங்கத்தவராயிருந்த அன்டிரூ மே என்பவர் அமெரிக்க பாராளுமன்றத்தின் ராணுவப் பகுதித் தலைவராயிருந்த காலத்திற் கைலஞ்சம்பெற்றார் என்ற குற்றச்சாட்டின் பேரில் 2 வருஷச் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டிருக்கிறார்.

## கடலில் விபத்து

### பலர் மாண்டனர் சிலரேதப்பினர்

சென்ற சனிக்கிழமை நயினாதீவிலிருந்து எழுவை தீவுக்குச் சென்ற ஓர் வள்ளம், ஏழாற்றுப்பிரிவில் ஓர் விபத்துக்குட் சிக்கிப் பலர் மாண்டனர் என்று அறிகிறோம்.

குறித்த வள்ளம், நயினாதீவிலிருந்து 20க்கு மேற்பட்ட பிரயாணிகளை ஏற்றிக்கொண்டு, அனலை தீவுக்குச் சென்றது ஏழாற்றுப் பிரிவுக்குச் சென்றதும் பாரம் தாங்கமாட்டாது அது கவிழ்ந்தது. அதில் இருந்த அனைவரும் கடலில் மூழ்கினர் 8 பேர் மாத்திரம் உடனே மீட்கப்பட்டனர் மீதிப்பேரில் 6 பேரது பிரேதங்கள் அகப்பட்டுவிட்டன. மற்றவர்கள் கெதி என்னவென்பது தெரியவில்லை. இறந்தவர்களில், ஆனைக்கோட்டைவாசிகள்-சிலர் என்றும் தெரிகின்றது. இவர்கள் நயினாதீவிலுள்ள தங் சுற்றத்தவர்கள் வீட்டுக்குச் [illegible] நிருந்து எழுவை [illegible]

# யுத்தக் கப்பல் ஏன்?

## தேர்தற் காலத்திற் பாதுகாப்பு?

இலங்கைச் சமதர்மக் கட்சியின் ஆதரவில் சென்ற ஞாயிற்றுக்கிழமை மாத்தறையில் நிகழ்ந்த ஓர் பொதுக் கூட்டத்தில், சமதர்மக்கட்சிக் காரியதரிசியான மிஸ்ரர் பீற்றர் கெனமன் தேர்தற் காலத்தில் தாம் வெற்றி பெறுதற்காக சேனநாயக்காக் கோஷ்டி ஆற்றிவரும் கருமங்களைக் குறிப்பிட்டார்.

அரசாங்க உத்தியோகத்தர், தம் கட்சிக்கு ஆதரவு அளிக்கமாட்டார்களென்பதை அறிந்துள்ள சேனநாயக்கா அரசாங்கம், அவ்வுத்தியோகத்தரிற் பலரை அவர்களது ஸ்தானங்களிலிருந்து மாற்றி யிருக்கிறது. அதன்பயனாக அவர்களிற் பலர் தங்கள் வாக்குரிமைகளை இழந்துவிட்டனர் என்று மிஸ்ரர் கெனமன் குறிப்பிட்டு மேலும் கூறியதாவது:

"இப்போது கொழும்புத்துறைமுகத்தில் ஓர் யுத்தக்கப்பல் வந்திருக்கிறது. ஆகஸ்டு மாதத்தில் ஏதும் குழப்பங்கள் நிகழாமல் இருப்பதற்கு முன்னேற்பாடாக இன்னும் இரண்டு யுத்தக் கப்பல்களைக் கொழும்புக்கு வரவழைக்க மிஸ்ரர் சேனநாயக்கா ஏற்பாடு செய்துள்ளார்"

# குறிப்புக்கள்

## மா விநியோகம்

இப்போதுள்ள அரிசி விநியோக அளவு அதிகரிக்கப்படலாம் என்று, இப்போது சில காலமாக எமது இலங்கை யதிகாரிகள் ஊரவர்க்கு ஒருவாறு ஆசைகாட்டி வந்தனர். ஊரவர் கொண்ட ஆசை நிராசையாக முடிந்துவிட்டது. இலங்கைக்கு அரிசி யனுப்பி வந்த நாடுகளில் ஒன்றாகிய பிரேஸில், சர்வதேச உணவுச் சபையிலிருந்து விலகிவிட்டபடியினால், அந்நாட்டிலிருந்து இலங்கைக்கு இந்த ஆண்டிற் கிடைக்க வேண்டிய 23,000 தொன் அரிசியையும் இந்நாடு இழந்துவிட்ட தெனலாம். இந்த நிலையில், பிச்சை வேண்டாம் தாயே, நாயைப் பிடி என்றவன் சிலமாக, உள்ள அளவையே குறைக்காவிட்டாற் போதும் என்ற நிலைக்கு இந்நாட்டு மக்கள் வந்துவிட்டார்கள், ஆனால், இந்த ஒருபடி யரிசியுடன் ஒரு மனிதன ஓர்வாரம் முழுவதுங் காலம் கழிக்க முடியாது என்பதனை அரசாங்கம் நன்கு உணரும். ஆகவே, இப்போதுள்ள மாவிநியோக அளவை அரசாங்கம் அதிகரித்தால் என்ன என்று கேட்கிறோம் இலங்கையிற் போதிய அளவுமா கையிருப்பில் இருக்கிறது. அதனைவிட இன்னும் நாலு கப்பலில்கூடிய சீக்கிரத்திற்பெருந்தொகையானமா இங்கே வரவிருக்கிறது. மா அனுப்பும்தேசங்களாகிய ஆஸ்திரேலியா, ஆர்ஜென்ரீனாமுதலாம்நாடுகளில் இந்த ஆண்டில் கோதுமை விளைவு மிகவும் சிறந்ததாக இருக்கிறதென்றும் தெரிகிறது. எனவே, அந்நாடுகளிலிருந்து மா இறக்குமதியாவதில் அதிகம் இடைஞ்சலும் ஏற்படாது என்று எண்ண இடம் இருக்கிறது. எனவே, இப்போதுள்ள மா விநியோக அளவை 2 றூத்தலிலிருந்து 3 றூத்தல் ஆக அதிகரித்தால், ஊரவர்கள் ஒருவாறு தம்பசிப் பிணியைப் போக்க முடியும் என்பதை அரசாங்கத்துக்குச் சமர்ப்பிக்க விரும்புகிறோம்.

## வரப்போகும் தேர்தல்கள்

சென்ற சனிக்கிழமை பாராளுமன்றத்து அபேட்சகராய் வரவிரும்புவோர் தம் நியமனப் பத்திரங்களைச் சமர்ப்பித்துவிட்டனர். இனித் தேர்தற் போராட்டம் மும்முரமாக நடக்கும் என்று எதிர்பார்க்கலாகும் ஆனால் இப்போராட்டம் ஜனநாயக முறையில், கௌரவமான முறையில் நடத்தப்பட வேண்டுமென்பதே எமது கோரிக்கையாகும். பாஷ்பரம் தூஷித்தல் தமது அபிப்பிராயத்துக்கு மாறுபட்டோர்மீது பலாத்காரப் பிரயோகம் என்பனவற்றுக்கு அபேட்சகராயுள்ளவரும், அவரை ஆதரிப்போரும் இடங் கொடுத்தலாகாது [illegible] த்தை எய்த [illegible] எம்மைப் பரிபாலிக்க அருகதை யுடையோமா என்பதை இத்தேர்தல்கள் வெளியுலகுக்குத் துலாம்பரமாகக் காட்டப்போகின்றன. இந்த விஷயத்தில் பொலிசாரும் தம கடமையைச் ஜரூராகச் செய்வர் என்று எதிர்பார்க்கிறோம். தேர்தற் காலத்திலே கட்சிபேதம் காரணமாகவுள் குழப்பங்களை முளையிலேயே கிள்ளி எறியப் பொலிசார் ஆயத்தமாயிருத்தல் வேண்டும். எத்தகையகுழப்பம் நேர்ந்தாலும் அதனைச்சமாளிக்கப் பொலிசார் தயார் என்று பொலிஸ்பகுதித் தலைவர் கூறுகிறார் வெறுங்கூற்றுடன் மாத்திரம் நிற்கமாட்டார்கள் என்பதனைப் பொலிஸ் தலைவர் அவர்களுக்குச் சமர்ப்பிக்கவிரும்புகிறோம் ஏற்கெனவேபல இடங்களில் அருவருப்பான—பொதுஜன சமாதானத்தைப் பங்கப்படுத்தக்கூடிய—சம்பவங்கள் நிகழ்ந்துவருகின்றன. இவற்றையெல்லாம் பொலிஸ்பகுதியார் இதுவரை அவதானித்திருக்கவேண்டும். ஆகவேகாலந்தாழ்க்காது, பொலிசார் இன்றே தம் கடமையை ஆற்ற முன்வருவாராக!

## பொய்ப் பிரசாரம்

காலபேதத்தினாற் பிரதானியும்அப்பிரதானியாகிறான் என்பது பஞ்சதந்திரம். இந்த இலங்கையின் முன்னேற்றத்துக்கு வழிகாலி, இந்த நாட்டின் சுதந்திரத்துக்கு மூலகாரணராக விருந்த தமிழ்மக்கள், இன்று சேனநாயக்கா—கொத்தலாவலை—குணசிங்கிக் கும்பலினால் தேசத் துரோகிகள் என்றும். இந்நாட்டிற்கு வேண்டா அந்நியர் என்றும் தூற்றப்பட்டு வருவது காலத்தின்கோலமல்லாது வேறு என்ன? காராக்கிருகத்தில் அன்று இந்தச் சிங்களத் தலைவர்கள் தவித்தகாலையில் அவர்களை விடுதலையாக்கி, சுதந்திர நாதம் முழக்கிய தமிழ்மக்கள் இன்றும்சரிகோழைகளாகிவிடவில்லை என்பதனைக் கொத்தலாவலை—குணசிங்கிக் கோஷ்டிக்கு நாம் தெரிவிக்க விரும்புகிறோம். இவர்களுடைய வகுப்புவாத நச்சுமொழிகள் உறக்கத்தில் கிடந்த தமிழ்மக்களைத் தட்டியெழுப்பிவருகின்றன; அதன்பொருட்டு அவர்களுக்கு நாம் நன்றி கூறுகின்றோம். இன்று அதிகாரம் வகிக்குள்ள கொத்தலாவலைக் கோஷ்டியினர் இப்போதுதானும் இந்த வகுப்புவாதப் பிரசாரங்களை நிறுத்தித் தமிழ்மக்களது ஒத்துழைப்பைப் பெற இனியும் முன்வராவிட்டால் அவர்களுடைய எதிர்காலம் அவ்வளவு சுபீட்சமாயிராது என்பதனை இப்போதே தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றோம். சிறுபான்மையினரான யூதர்களையும் ஏனைய மக்களையும் வருத்திக் கொடுங்கோலோச்சிய ஹிட்லர், முசோலினி முதலியோர் அடைந்த கதியை இச்சிங்கள வகுப்புவாதிகளும் அடையுங் காலம் தூரத்தில் இல்லை.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

இந்திய அரசியல்

# தாயின் மணிக்கொடி

## தரணி எலாம் இனிப் பறக்கும்

### தாயின் மணிக்கொடி

வருகிற ஆகஸ்டு மாதம் 15-ம் திகதி யன்று பிரிட்டன் தன் அதிகாரம் முழுவதையும் இந்தியாவுக்கும், பாகிஸ்தானுக்கும் மாற்றும் அத்தினத்தை ஓர் புனித தினமாகக் கொண்டாட ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன. குறித்த தினத்தன்று, இந்தியாவின் 'கவர்னர் ஜெனரல்' பதவியை மவுன்ற் பேற்றன் பிரபுவும், பிரதம மந்திரிப் பதவியைப் பண்டிதர் ஜவஹர்லால் நேருவும் ஏற்று, நீலநிறத் தர்ம சக்கரத்துடன் கூடிய மூவர்ணக்கொடிக்கு வணக்கம் செலுத்துவர். இந்த மூவர்ணக் கொடியின் மானத்தைக்காத்து உயிரிழந்த பாரத மக்கள் அநேகர்: அதனை ஆரோகணித்துச் சிறைவாசம் புகுந்தோர் பல்லாயிரவர்: இன்று பாரதமாதாவின் அதே மணிக்கொடிக்கு, மாட்சிமைதங்கிய பிரிட்டிஷ் மன்னரின் பந்துவான மவுன்ற்பேற்றன் பிரபுவே முதல் வணக்கம் செய்யப் போகிறார். ருஷியாவுக்குத் ஸ்தானிகராகச் செல்லும் ஸ்ரீமதி விஜயலக்ஷுமி பண்டிதரும் தேசியக் கொடிகளைக் கொண்டு செல்கிறார் அங்குள்ள இந்திய ஸ்தானிகர் காரியாலயத்தின்மீது பாரதநாட்டின் மணிக்கொடி வானளாவப் பறக்க விடப்படும்: இப்படியே உலகெங்கும் உள்ள இந்திய ஸ்தானங்களில் பாரதநாட்டின் தெய்வீகக் கொடி இனிக் கம்பீரமாகப் பறக்கும்

○

### கூட்டு அறிக்கை

இந்திய அரசாங்கத்தின் சார்பாகவும், பாகிஸ்தான் அரசாங்கத்தின் சார்பாகவும் ஓர் கூட்டறிக்கை இப்போது வெளிவந்திருக்கிறது இந்தியாவும் பாகிஸ்தானும் பிரிக்கப்பட்டபின், இரண்டு பிரதேசங்களிலும் உள்ள சிறுபான்மைச் சமூகத்தினர், பட்சபாதமின்றி நேர்மையுடன், நீதியுடன் நடத்தப்படுவதற்கு இருதேச அரசாங்கங்களும் பூரண உத்தரவாதமளிக்குமென்றும் பழைய அபிப்பிராயபேதங்களையெல்லாம் மறந்துவிட்டு, இருதேசத்திலும் உள்ள மக்கள் அவ்வத் தேச நலன் கருதிப், பரிபூரண ஒற்றுமைகருதி உழைக்கவேண்டுமென்றும் அவ்வறிக்கை கூறுகிறது. பாஞ்சாலம், கிழக்கு மேற்காகப் பிரிக்கப்பட்டு, இருபகுதி அரசாங்கங்களும் ஸ்திரமாக வேலை செய்யும்வரையில் பாஞ்சாலத்திலே விவாதத்துக் கேதுவான சில பிரதேசங்களில், ஓர் ஐரோப்பிய சேனாதிபதியின் தலைமையில் ஓர் ராணுவபீடத்தை ஏற்படுத்துவதென்றும், மேற்படி அறிக்கை கூறுகின்றது இந்த அறிக்கைக்குஇந்திய அரசாங்கம் சார்பாக சர்தார் படேல் பாபு இராஜேந்திர பிரசாத்தும், பாகிஸ்தான் அரசாங்கம் சார்பாக ஜனாப் ஜின்னாவியாகத் அலிகானும், சீக்கியர் சார்பாக சர்தார் பலதேவ் சிங்கும், ஒப்பமிட்டிருக்கின்றனர், பாகிஸ்தானும் இந்தியாவும் பரிபூரண சுயராச்சியதை எய்தி, அதன்பயனாக உலகின் சிறந்த இராச்சியங்களாக மிளிர்வதற்கு, அங்கேயுள்ள சகல வகுப்பினரும் பூரண ஒற்றுமையுடன் இருக்க வேண்டுமென்றும் பலாத்காரச் செயல்களை எந்த வகுப்பினரும் கைக்கொள்ளக் கூடாதென்றும் மேற்படி அறிக்கை மீண்டும் வற்புறுத்துகிறது;

○

### திருவாங்கூர்த் திவான்மீது பலாத்காரம்

திருவாங்கூர்த் திவானாகிய சேர் வி. பி. இராமசாமி ஐயர் சென்ற வெள்ளிக்கிழமை, ஸ்ரீ ஸ்வாதித் திருநாள் உற்சவத்தின்போது தமது காருக்குப் போக இருக்கையில், யாரோ ஒருவன் அவரை வாளினால் தாக்கி, அவர் முகத்திற் பலகாயங்கள் விளைத்துவிட்டு அங்கு நின்ற ஜனக்கும்பலில் மறைந்துவிட்டான் என்றும், திவான் முகத்திற் பல காயங்களுடன் ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப்பட்டார் என்றும் ஓர் செய்தி கூறுகிறது. திருவாங்கூர் இந்திய சமஷ்டியுடன் சேராது நிற்பதற்குக் காரணம் சேர். இராமசாமி ஐயரின் கொள்கையே காரணம் என்று எண்ணியவிஷமிகளின் கிருத்திரமவேலையே இது எனச் சந்தேகிக்கப்படுகிறது.

○

### இராஜப் பிரதிநிதியின் புத்திமதி

சென்றவாரம் இந்தியச் சமஸ்தானாதிபதிகளின் மகாநாடு ஒன்றை இராஜப்பிரதிநிதி மவுன்ற்பேற்றன் கூட்டி சமஸ்தானங்கள் ஒன்றில் இந்தியாவுடன் அல்லது பாகிஸ்தானுடன் சேரவேண்டிய அவசியத்தை வற்புறுத்தினர் என்று தெரிகிறது சமஸ்தானங்கள் சுயேச்சையாகத் தனித்தியங்காமல், பாகிஸ்தானுடன் அல்லது இந்தியச் சமஷ்டியுடன் சேர்வதால் அவை தமக்கும் இந்தியாவுக்கும் சேவைசெய்பவையாய்முடியும் என்பதை இராஜப்பிரதிநிதி விளக்கினர்.

○

### மேற்கு வங்கத் தேசாதிபதி

ஆகஸ்டு மாதம் 15 ம் திகதியுடன் மேற்கு வங்காளத்தின் தேசாதிபதியாக இப்போது காங்கிரஸ தலைவராகவுள்ள ஆச்சார்ய கிருபாலினி நியமிக்கப்படலாம் என்று ஓர் செய்தி கூறுகிறது. பீகார் மாகாணத்துக்கு பாபு இராஜேந்திர பிரசாத்தையே தேசாதிபதியாக நியமிக்க வேண்டுமென்று அம்மாகாணமக்களபெரிதும் விரும்புவதாக இன்னோர் செய்தி கூறுகிறது பம்பாயிலும் சென்னையிலும் இப்போதிருக்கும் ஆங்கில தேசாதிபதிகளே இன்னும் சிலகாலத்துக்கு அம்மாகாணங்களில் இருக்கவேண்டும் எனக் காங்கிரஸ் விரும்புகிறது. மற்றும் மாகாணங்களில் உள்ள ஆங்கிலேய தேசாதிபதிகள் நீக்கப்பட்டு அவர்களின் இடத்துக்கு இந்தியர் நியமிக்கப்படுவர்.

○

### இந்தியாவின் புதிய சேனாதிபதி

இந்தியாவின் சேனாதிபதியாக, இப்போது வடமேற் செல்லைப்புற மாகாணத் பிரதித்தேசாதிபதியாக விருக்கும் சேர். ரோப் லொக்ஹாட் என்பவர் நியமிக்கப்படலாம் என்று ஓர்செய்தி கூறுகிறது. பாகிஸ்தானின் சேனாதிபதியாக யார் நியமிக்கப்படுவர் என்பது இன்னும் நிச்சயமாகத் தெரியவில்லை.

○

### கூட்டுத் தொகுதி முறை

இப்போது இந்தியாவிலே அமுலில் உள்ள தனித தொகுதித் தேர்தல் முறையை ஒழித்து, கூட்டுத்தொகுதி முறையையே, தேர்தல்களில் அநுசரிக்க வேண்டும் என்று இந்திய அரசியல் நிர்மாண சபை தீர்மானித் திருக்கிறது.

# உயர்திரு. சுவாமி விபுலானந்தர்

ஆசிரியர்: க சரவணமுத்து. நவாலியூர்

வெண்பா

தமிழின் தனிக்குன்றே! தண்ணளிசேர்ந் தூறும்
அமிழ்தே! அருட்கடலே! அந்தோ! — குமிழிநீர்
சென்றாற்போற் சென்றாய் சுவாமிவிபு லானந்தா!
பொன்றாது பொங்குகநின் பெட்பு.

மறைந்தாலும் மாட்சி மறையாத மன்னா!
நிறைந்த புகழ்நிற்க நீவிண் — ணுறைந்தாய்
சுவாமிவிபு லானந்தா! செந்திவேற் கந்த
சுவாமி திருவடியிற் சேர்

சிவம்

# தமிழ் நாட்டின் தவப் புதல்வன்

## விபுலானந்த அடிகளின் சீரிய தொண்டு

(வட்டூர் க. கயிலாயநாதன், சென்னை பச்சையப்பன் கல்லூரி)

ஈழ நாடு எழிலுறு புதல்வனை இழந்தது. தமிழ் நாடு தவப் புதல்வனை இழந்தது. தமிழ் அன்னை தவிக்கின்றனள். அறிவறிந்த மகப் பேற்றைப் பெற்று உகந்த எமது தமிழ் அன்னை இப்பேரறிஞரைப் பிரிய நேர்ந்தது அவள் தவக்குறைவே. இனி என்றுதான் இத்தகை அறிவுடைச் சுடர் தமிழரிடைத் தோன்றுவரோ என்று ஒவ்வொரு தமிழன் உள்ளமும் ஏங்குகின்றது.

ஆங்கிலம் கற்றாலும் அறிவியல் அறிஞராய் விளங்கினாலும் தான் தமிழன் என்பதை மறந்தாரல்லர். மூச்சிலும் பேச்சிலும் செயலிலும் தமிழ் ஒலித்த வண்ணமே இருந்தது. "யான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்" என்று அறிந்த யாவற்றையும் தமிழாக வாரி இறைத்தனர். தமிழனைத் தட்டி எழுப்பினர். ஆரா இன்பத்தைப் பருகச் செய்தனர்

வாழ்க்கையில் தொண்டு என்பதையே குறிக்கோளாகக் கொண்டு வாழ்ந்தவர். எமது அடிகள், மிக இளமையிலேயே துறந்தார். துறத்தல் என்றால் நாடு விட்டுக் காடு செல்வதன்று என்பதை வலியுறுத்தியவர் இவர். ஐம்புலனை அடக்கிச் செம் பொருளை அடைய வழிகாட்டியாயிருக்கும் இராமகிருஷ்ண மடத்தை அடைந்தார். "காணுதற்கரியார் தம்மை, ஆர்வமுன் பெருக ஆரா அன்பினிற் கண்டு கொண்டே" என்று சேக்கிழார் கண்டவாறு விபுலானந்த அடிகள், அன்பினிலேயே தமது மதத்தைக் கண்டனர். அதுஇவர்களைப்பணியாற்றஇயக்கியது

நுண்மாண் நுழைபுலம் மிக்க இப்பெரியார் பேச்சினாலும் எழுத்தினாலும் அளவற்ற தொண்டை ஆற்றியுள்ளார். தமிழன் கலை, தமிழன் நாகரிகம் என்றெல்லாம் பேசுகின்றோம். பழங்கதைகளை பேசுகின்றோம். மிகச் சிலரே செய்கை முறையில் பாடுபட்டனர். அடிகளார் ஆற்றிய தொண்டுகளில், தமிழ் இசைக் கலைக்காக இவர்கள் பாடுபட்டது முன்னணியில் காணக்கிடக்கின்றது. 'யாழ் நூல்' இயற்றுவேன் என்று துணிந்தார். பல்லாண்டுகளாகத் தாழாதுழைத்தனர். இறைவன் அடிசேர முன்பே தமது முயற்சிக் கற்பு அண்மையில் அதை அரங்கேற்றினர். இன்று தமிழன் அதைப் பெற்று மகிழ்கிறான். இதற்கிடையில் அடிகள் புகழுடம்பு நிலவுகின்றது இவர்கள் துறவு, தூய்மை, அறிவு தொண்டு முதலியன ஒவ்வொருவருக்கும் வழிகாட்டியாக மிளிர்கின்றன, இவர்களின் வாழ்வு தமிழன வாழ்க்கைக்கே சிறந்த எடுத்துக்காட்டாம்.

21—7—47 அன்று சென்னைப் பச்சையப்பன் கல்லூரியில் நடைபெற்ற அனுதாபக் கூட்டத்தில் தலைமை தாங்கிய கல்லூரித் தமிழ் பகுதித் தலைவர் வித்துவான் மு. வரதராசன் B. O. L., M. O L அவர்கள் பின்வருமாறு குறிப்பிட்டனர். "இன்று நாம் நினைந்து நினைந்து வருந்தும் நிலையில் நம்மைப் பிரிந்த பெரியார் மிக உயர்ந்த வாழ்க்கை வாழ்ந்தவர், லண்டன் B. Sc. பட்டம் பெற்றுத் தேர்ந்த அறிவுத்திறன் நிரம்பியவர்; இராமகிருஷ்ண ஞானியின் வாழ்க்கையிலும் உபதேசங்களிலும் உள்ளத்தைப் பறிகொடுத்துத் துறவு பூண்டவர். இவர் துறவு தனிச் சிறப்பு வாய்ந்தது. சிறந்த நோக்கங்கள் கொண்டு உயர்ந்த வாழ்க்கை வாழ்ந்ததே இவர் வாழ்வு. தோற்றத்தின் வீறு, நடையின் பெருமை, இவற்றிற்கு அணி செய்யும் குரலின் இனிமை, ஆற்றொழுக்குப் போன்ற பேச்சு, தமிழ் ஆராய்ச்சி வன்மை அறிவின் எல்லையில் நிற்கும் அமைதி இவற்றை எல்லாம் சுவாமி விபுலானந்தர் தம் வாழ்வில் விளக்கி வந்தார். இவற்றை எல்லாம் ஒருங்கே காணும் வாழ்க்கை ஒப்பற்ற வாழ்க்கை அல்லவா?

இமய மலையடியில் இராமகிருஷ்ண மடத்தில் பல ஆண்டுகள் தங்கியிருந்த போதும், அங்கிருந்தே தமிழ் எழுதினார் தமிழ் ஆராய்ச்சி செய்தார், யாழ்க் கலையில் மூழ்கினர். தொண்டு, தமிழ், யாழ் இவை எல்லாம் அவரை எங்கும் விடவில்லை. அவர் வாழ்க்கையில் மூன்றும் ஒன்றாகவே கலந்து விட்டன போலும்.

அறப் பெருந் துறவி மறைந்தார். அவர் வாழ்க்கை நம் உள்ளக் கோயிலில் ஒளிர்கின்றது. ஆயினும், நாம் தமிழர். வெறும் நினைப்பளவில் நன்றியுணர்வை மாற்றிவிடும் வழக்கம் நம் பண்பாடு அல்ல தமிழர் பழங்கால முதல் வாழ்க்கை முடிவில் கல் நாட்டி வழிபடும் வழக்கம் கொண்டவர் அதை நம் ஒப்பற்ற தலைவர்க்குச் செய்வோம். தமிழ் நாட்டின் தலைநகராகிய சென்னையில் அவர் தம் உருவச் சிலை ஒன்று அணிபெற அமையவேண்டும். அதை நிறைவேற்றுவது தமிழ்க் கழகங்களுக்கும் தமிழறிஞர்க்கும் இன்றியமையாத கடமையாகும்.

# தமிழ்த் தொண்டு

## ஸ்ரீ வைத்தியநாதன் வேண்டுகோள்

"எதிர்கால உலகத்தைச் சிருஷ்டிக்கும் மாணவர்களுக்குக் கல்வி கற்பித்தல் என்னும் அரிய, பெரிய பணியைச்செய்து வருகின்ற ஆசிரியர்களும், மற்றைய பெரியாரும் கூடியிருக்கின்ற இக் கல்வி மகாநாட்டைத் திறந்து வைப்பதில் பெருமகிழ்ச்சியடைகின்றேன். கல்வி சம்பந்தமான கொள்கைகளெல்லாம் மின்னல் வேகத்தில் மாறிக்கொண்டிருக்கும் இக்காலத்தில், இத்தகைய மகாநாடுகள் கூடிக் கல்வி சம்பந்தமான விஷயங்களை ஆராய்வது மிகமிக அவசியமாகும்".

மேலே குறிப்பிட்டவாறு 19-7-47 சனிக்கிழமை கம்பளையில் நடைபெற்ற கல்வி மகாநாட்டைத் திறந்துவைக்கும் போது மத்தியமாகாண அதிபதி திரு. கே. வைத்தியநாதன் குறிப்பிட்டார்.

இக்கல்வி மகாநாட்டை ஒழுங்குசெய்து நடாத்திய வித்தியாதரிசி திரு வே. சிவகுரு, தமது வரவேற்புரையில், ஆழ்ந்த அறிவும், பொதுசன சேவையில் ஆர்வமுமுள்ள திரு. கே. வைத்தியநாதன் இம்மகாநாட்டைத் திறந்துவைப்பது மிகப் பொருத்தமானதெனக் குறிப்பிட்டார்

தலைவர் மேலுங் கூறியதாவது:

ஒரு தேசத்தில் பல மதங்கள், பலபாஷைகள், பல சாதிகள் இருப்பதனால் அத்தேச முன்னேற்றந் தடைப்படுமெனக் கருதுவதில் அர்த்தமில்லை. பல சாதிகளும் பல மதங்களும் பல பாஷைகளும் இருந்தபோதிலும் அத்தேச முன்னேற்றம் தடைப்படாது. சீனாவில் பெரும்பாலும் ஒரே பாஷையே நடைமுறையிலிருந்து வந்தபோதிலும் அத்தேச வளர்ச்சியும் நாகரிகமும் மங்கிக்கொண்டேயிருக்கின்றன. சாதிகள், மதங்கள், பாஷைகள் பல இருப்பதும் சில காலங்களில் நன்மையாகும் இது மக்கள் போட்டிபோட்டுக் கொண்டு முன்னேறுவதற்கு வழியாக இருக்கும்.

### தமிழ் இலக்கியங்கள்

நம்முடைய தமிழ் இலக்கியங்களெல்லாம் பண்டிதர்களுடைய ஏகபோக சொத்தாகவே இருக்கின்றன. அவைகளைப் படித்துப் புரிந்துகொள்ள முடியும். பாமரன் இலக்கியச் சுவையையும், கவிதை இன்பத்தையும் அனுபவிக்க முடியாது. எனவே, இவைகளெல்லாம் எளிய—இலேசான தமிழில் எழுதப்படல் வேண்டும். இவ்விதமான நூல்களே பொது மக்களின் அறிவு வளர்ச்சிக்கு வாய்ப்பானவை. இந்த நூல்களாலேயே மக்கள் பயனடைவர், இந்த நூல்களே அறியாமை என்னும் படுகுழியில் இருந்து வருந்திக்கொண்டிருக்கின்ற மக்களை வெளியிலே தூக்கிவிட்டு அறிவுச் சுடரைப் பிரகாசிக்கச் செய்யும். இவ்விதமாக இலேசான தமிழில் நூல்களை எழுதக்கூடியவர்கள் ஆசிரியர்களே எனவே, அவர்களை இத்தொண்டில் ஈடுபடுமாறு வேண்டுகின்றேன்.

பின்னர் மத்திய மாகாண வித்தியாதிகாரி திரு. ஏ. கே. இராசிங்கம் 'கல்லா

(தொடர்ச்சி 4ம் பக்கம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலவசக் கல்வி

( திரு—சங்கு—சாது )

நாட்டின் அபிவிருத்தியை விரும்புகிறவர்களும், மதம் மொழி தேசப்பற்றுள்ள பொதுநல சேவையாளர்களும் இலவசக்கல்வியை ஒருபோதும் எதிர்க்கார்கள். ஆனல் கல்வியை இலவசமாக ஊட்டத் தொடங்குவதற்கு முன் அரசாங்கசபை ஓர் சட்டமூலம் கல்வி சுயமொழி மூலமும் சுயமதப் பாடசாலைகள் கள் வாயிலாகவுமே கற்பிக்கப்படுதல் வேண்டுமெனப் பிரமாணம் ஏற்படுத்தியிருக்கவேண்டும் அவற்றோடு தகுதியும் திறமையுமற்ற உபாத்திபாயர்களைப் பதவியிலிருந்து நீக்கியிருத்தல் வேண்டும். சுதந்திரத்தை நாடிநிற்கும் நாடுகளிற் கல்வி சுயமொழி மூலமே ஊட்டப்படல் வேண்டும். இல்லையேல் தேசப்பற்று மொழிப்பற்று மதப் பற்று குன்றிவருமென்பது திண்ணம். 1946-ம் ஆண்டில் ஆங்கில எஸ் எஸ் சி. பரீட்சை எடுத்த 9500 மாணுக்கர்களில் 2462 பேர் மாத்திரந்தான் சித்தியடைந்தார்களெனப் பத்திரிகைகள் கூறுகின்றன. சித்தியடைந்தவர்களில் அநேகர் சிங்களத்திலுந் தமிழிலுமே தவறினர்களென் றறிகின்றேம். அப்படியானல் சுயமொழிமூலம் கல்வி ஊட்டப்படின் இவ்வாறு நிகழ்ந்திராதென்றது வெள்ளிடைமலை. இன்றும் இலங்கையில் பௌத்த, சைவ, இஸ்லாமிய மாணுக்கர்கள் கிறீஸ்தமதப் பாடசாலைகளிற் கல்வி கற்பதால், தங்கள் சொந்த மதத்தை இகழ்ந்து கிறீஸ்த மதத்தைத் தழுவி வருகிறார்களென்றதெவருமறிந்ததே! ஆனதால் இம் மும்மதத்தினரும் கிளர்ச்சி செய்து தங்கள் குழந்தைகள மிஷனரிமார்களுடைய பாடசாலைகளிற் கல்வி கற்காது சட்டம் ஏற்படுத்தித் தடுத்தல் ஆவசியம். அல்லாவிடில் இம் மும்மதத்தவர்களின் வாழ்க்கை இன்று கீழ் நிலையை அடைந் திருப்பதைவிட மேன் மேலும் சீர்குலைந்துகொண்டே வரும்.

எல்லவற்றிற்கும் மேலாக இன்றைய இலங்கைக் கல்விச் செல்வத்தை மற்றை நாடுகளோடு ஒப்பிட்டுப் பார்க்கும்போது ஏனைய நாடுகளைவிட மிகவும் கீழான—நிலையை நாடி மாட்டுவால் போல வளர்கின்றது. இதற்குப் போதிய சான்று சென்ற ஆண்டின ஆங்கில S. S. C பரீட்சையின் பெறுபேறே! கல்வியில், எவராலும் அருவருத்து நிந்திக்கத்தக்க கீழ்த்திசையை நாடினவோர் நாட்டிற்குப் போதிய பாதுகாப்பின்றி இலவசக் கல்வி ஏற்படுத்தினது தீமையாகவே முடிந்திருக்கின்றதென்க் கருதவேண்டியிருக்கின்றது. இன்றைய கல்வியின் கேவல நிலைக்கு, மேல்வகுப்பு ஆசிரியர்களும் ஓர் அளவுக்குக் காரணரெனின் பொருந்தும்; ஆசிரியர்களுக்கு உயவாகிய சம்பளமும் இளைப்பாறுகிற காலத்தில் உபகாரச் சம்பளமும் கொடுத்தல் நீதியே! ஆனல் அவ்வாசிரியர்கள் சமயப்பற்று மொழிப்பற்று நாட்டுப்பற் றுடையவர்களாயும், நல்லொழுக்கம், விவேகம், கல்வியில் விருப்ப முடையவர்களாயும், கடமையிற் றவறுதவர்களாயும், இடையறு முயற்சி யுடையவர்களாயும், ஆரோக்கிய முடையவர்களாயு மிருத்தல் வேண்டும். இத்தகைய இலட்சணங்க ளில்லாதவர்கள் ஆசிரியராகக் கடமை பார்க்க அருகரல்லர். அருகரல்லாதவர் பதவியில் நின்று நீக்கப்படுவதே உத்தமம். ஏனெனில் வரியிறுப்போர் பணத்தைக் குடித்துவிட்டு குழந்தைகளைக் குட்டிச்சுவராக்காம லிருக்கவே!

எல்லாச் சமயங்களும் கீழைத் தேசங்களிலேயே தோன்றின. எனினும் கிறீஸ்த சமயம் மேலைத் தேசங்களில் அபிவிருத்தியானபின் உருக் குலைந்துவிட்டதென்று மகாத்மா கூறியுள்ளார் அத்துடன் மிஷனரிமார்களுடைய ஒரே நோக்கம் தங்கள் மதத்திற்கு ஆள் சேர்ப்பதே! இன்னும் இவர்களிற் சிலர் தங்கள் சமயமே உண்மைச் சமயம்; மற்றைச் சமயங்களெல்லாம் பொய்ச் சமயங்களென்ற எண்ண முடையவர்கள்; இவ்வாறெல்லா மிருப்பதால் சட்டப் பிரமாண மூலமாகக் கிறீஸ்த மதத்துப் பாடசாலைகளில் மற்றை மதப் பிள்ளைகள் கல்வி கற்காமல் தடை பண்ணப்பட வேண்டிய தவசியம் தேசப்பற்றுடையோர், மொழிப்பற்றுடையோர், மதப் பற்றுடையோர் இதைப்பற்றிக் கிளர்ச்சி செய்யாதது பேராச்சரியமேயாம்! ஆயிரக் கணக்கான மைல் ளுக்கப்பா லிருந்துவந்து எங்கள் மக்களைத் தங்கள் வலையிற் பிடித்துக்கொண்டிருக்கிறார்களே! இவர்களின் ஆர்வத்தில் — பிடிவாதத்தில் — ஊக்கத்தில் ஆயிரத்தி லொருபங்கு எங்களுக்கிருக்குமேயானல் இவர்கள் தூண்டிலில் எங்கள் மக்கள் சிக்காது அரசாங்கப் பிரமாணம் வாயிலாகவும், போதனை சாதனையாலும், நாம் தேடாது வாளா கிடப்போமா! சைவர்களே நாவலரை நினையுங்கள்! சமயந் தாழாது செய்யுங்கள்!

பரீட்சைகளில் எண்பதுவீதம் சித்தியடையாவிடின் அநியாயமாய் ஆசிரியர்களுக்கு வரியிறுப்போர் பணத்தை வாரியிறைத்தல் முறைபாகுமா? 9500 பிள்ளைகள் பரீட்சை எடுத்தவிடத்து 2462 பிள்ளைகள் மாத்திரம் சித்தியடைந்தார்களென்னின் அந்த நாடு கல்வியில் பெரும் பிற்போக்கடைந்திருக்கின்றதென்பது கண்கூடு. ஆனதால் இனிவரும் ஆண்டுகளில் கூடிய தொகையினர் பரீட்சைகளிற் சித்தியடையத்தக்க வழி வகைகளைக் கையாளுதல் வேண்டும். இலங்கைச் சைவ மக்களே சைவ அன்பர்களே, பரோபகாரச் சிந்தைச் சிவபக்தர்களே, பொதுநல வீரர்களே, ஆத்மஞானத்தைப் புகட்டாதகல்வி மிஷனரிமார்களுடைய பாடசாலைகளிற கற்கும் கல்வி சைவச் சனசமூகத்தைத் தித்திப்பில்லாப் பேய்க் கரும்புக் கூட்டத்திற்குச் சமானமாக்கிவிடும் ஆகையால் சைவமக்கள் கிறீஸ்த பாடசாலைகளிற் கல்விகற்காது தடுத்து உய்வீர்களாக, சைவ சமயக் கல்வியை ஊட்டுங்கள்!. தூங்கினது போதும், எழுமின்!

## கைவிடப்படுமா?

## இலவசக் கல்வி முறை

டக்ரர் ஜீ. ஸீ. மேன்டிஸ் என்பவர், சென்றவாரம், கண்டி கிங்க்ஸ்வூட் கல்லூரிப் பரிசளிப்பு விழாவில் செய்த ஓர் சொற்பொழிவில் அடுத்த பாராளுமன்றம் கடமையையேற்றதும், இலவசக்கல்வித் திட்டமுறை கைவிடப்படலாம் என்று கூறினர்.

இதற்குரிய காரணங்கள் இரண்டு; முதலாவது இலவசக்கல்வி முறையினல் இலங்கைக்குப் பெருந்தொகைப் பணம் செலவாகிறது; இவ்வளவு பெருந்தொகைப்பணம் இனிக் கிடைப்பது அரிது. இரண்டாவது காரணம், இனிவரும் கல்வி மந்திரி, இதுவரை மந்திரியாயிருந்த மிஸ்ரர் கன்னங்கராவின் திட்டத்தை நடத்துவரோ என்ற சந்தேகம் இந்தக் காரணங்களினல், இன்னுஞ் சில காலத்தில் இலவசக்கல்விமுறை, இந்நாட்டில் ஒழிக்கப்படலாம் என்று மிஸ்ரர் மேன்டிஸ் கூறினர்;

# தமிழ்த் தொண்டு

3-ம் பக்கத் தொடர்ச்சி)

சிரியர்' என்னும் விஷயம் பற்றியும், கம்பளை நகரசபைத் தலைவர் ஜனுப் எஸ்.எம். சரீப். 'இலவசக்கல்வி' என்னும் விஷயம் பற்றியும் பண்டிதர் க. சபா ஆனந்தர், ''அரக்கனும் அணங்கும்' என்னும் விஷயம் பற்றியும் சிறந்த விரிவுரை நிகழ்த்தினர்கள்.

இரண்டாம் நாள் கம்பளை நகரசபை உபதலைவர் திரு. த சின்னப்பா தலைமையில் நடைபெற்ற இக்கல்வி மகாநாட்டில் பண்டிதர் வீ. ஏ. யோண்பிள்ளை, பண்டிதர் க. சபா. ஆனந்தர், திரு சோ. நடராசன் திரு எஸ். ஞானப்பிரகாசம் என்னும் அறிஞர்களும், மூன்றும்நாள் வித்தியாதரிசி திரு எஸ் தியாகராசா தலைமையில் நடைபெற்ற இக கல்வி மகாநாட்டில் அகில இலங்கைத் தமிழாசிரிய சங்கத் தலைவர் திரு கே. ஆறுமுகம் டக்ரர் இ. கனகசுந்தரம், பண்டிதர் வீ. ஏ யோண் பிள்ளை, திரு சோ. நடராஜன் என்னும் அறிஞர்களும் நான்காம் நாள் மத்தியமாகாண வித்தியாதிகாரி திரு எஸ். கே. இராஜசிங்கம் அவர்கள் தலைமையில் நடைபெற்ற இக்கல்வி மகாநாட்டில் வித்தியாதரிசி திரு இ. திருநாவுக்கரசு, வித்தியாதரிசி திரு வே சிவகுரு, டக்ரர் ஈ. த. சரவணமுத்து என்னும் அறிஞர்களும் விரிவுரைகள் நிகழ்த்தினர்.

# அபேட்சகர் நியமனம்

## 360 பேர் முன்வந்துள்ளார்கள்

இலங்கையின் புதிய பாராளுமன்றத்துக்கான நியமனப் பத்திரங்கள் சென்ற சனிக்கிழமை இலங்கையெங்கணும் சமர்ப்பிக்கப்பட்டன. இவர்களில் ஒருவர்மாத்திரம்—புத்தளப்பகுதிப் பிரதிநிதியாக முன்வந்துள்ள மிஸ்ரர் எச் எஸ் இஸ்மெயில் போட்டியின்றித் தெரிந்தெடுக்கப்பட்டார். மீதியானவர்களில் 100 பேர் ஐக்கிய தேசியக் கட்சியைச் சேர்ந்தவர்கள் சமசமாஜிகள் சார்பாக 30 பேரும், போல்ஷெவிக் லெனின் கட்சியின் சார்பாக 10 பேரும், சமதர்மக் கட்சியின் சார்பாக 14 பேரும், சுயேச்சைவாதிகளாக 135பேரும் போட்டியிடுகிறார்கள். அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸின் சார்பாக 8 பேர் போட்டியிடுகின்றனர். இப்போதுள்ள மந்திரசபையில் உள்ளவர் அனைவர்க்கும் போட்டியிருக்கிறது.

போட்டியின்றித் தெரிவுசெய்யப்பட்ட மிஸ்ரர் இஸ்மெயில் ஐக்கிய தேசியக்கட்சியைச் சேர்ந்தவராவர்.

வட மாகாணத்து அபேட்சகர்களின் பெயர்கள், அவர்களுடைய கட்சி, அவர்களுக்களிக்கப்பட்டுள்ள அடையாளங்கள் என்பன வருமாறு.—

**சாவகச்சேரி**

ஸ்ரீ வி. ஆர். தம்பையா (ஐ. தே. க) வீடு
,, வி. குமாரசுவாமி (த.கா.) தராசு

**யாழ்ப்பாணம்**

ஸ்ரீ அ. மகாதேவா (ஐ தே. க.) யானை
,, ஜீ ஜீ. பொன்னம்பலம் (த.கா) துவிச்சக்கரம்

**காங்கேசன்துறை**

ஸ்ரீ எஸ். நடேசன் (ஐ. தே. க) தராசு
,, எஸ். ஜே வி. செல்வநாயகம் (த கா.)
,, பீ. நாகலிங்கம் (சமசமாஜி) கை [திறப்பு

**கோப்பாய்**

ஸ்ரீ எஸ். இராஜரத்தினம் (ஐ. தே க.) கை
,, வி. வன்னியசிங்கம் (த. கா.) யானை
,, வி ரகுநாதன் (சுயேச்சை) சில்லு

**ஊர்காவற்றுறை**

சேர். வை. துரைசுவாமி (சுயேச்சை) துவிச்சக்கரம்

ஸ்ரீ ஏ. தம்பிஐயா (சுயேச்சை) தராசு
,, ஏ. வி குலசிங்கம் (த.கா.) கை
,, ஜே. வி. அமரசிங்கம் (சுயே.) விளக்கு
,, வி. அம்பலவாணர் (சுயே.) குடை

**மன்னார்**

ஸ்ரீ ஜே. தியாகராஜா (ஐ தே. க) குடை
,, வி. சிற்றம்பலம் (சுயேச்சை) திறப்பு
,, எஸ் விராசுப்பிள்ளை (சுயே.) கை

**பருத்தித்துறை**

ஸ்ரீ ரீ. இராமலிங்கம் (த கா.) தராசு
,, எஸ். தர்மகுலசிங்கம் (சமசமாஜி) கண்
,, வீ. சுப்பையா (சுயேச்சை) சாண்டி
,, பி. கந்தையா (சமதர்மி) கை

**வட்டுக்கோட்டை**

ஸ்ரீ கே. கனகரத்தினம் (த.கா.) யானை
,, எச். எஸ் பேரின்பநாயகம் (சுயே.) டீஸ
,, பீ. ரகுபதி (சுயேச்சை) விளக்கு
,, வீ. வீரசிங்கம் (சுயேச்சை) குடை
,, கே சண்முகம் (சுயேச்சை) தராசு

**வவுனியா**

ஸ்ரீ T. M. சபாரத்தினம் (த.கா) சாண்டி
,, வி. சுந்தரலிங்கம் (சுயே.) மரம்

## கொலைக்குக் காரணர்?

## பர்மா அக்கிரம விபரம்

சேனதிபதி ஆங்ஸேன் உட்பட ஏழு மந்திரிகளையும் கொலைசெய்யத் தூண்டியவர், முன்னர், பர்மாப் பிரதமராக விருந்த யூஸா என்று ஓர் செய்தி கூறுகிறது. இக்கொலை சம்பந்தமாகச் சிறைசெய்யப்பட்டவர்களில் ஒருவரும், யூஸாவின் நெருங்கிய பந்துவுமான ஒருவர், யூஸாவே இக் கொலைகளைச் செய்வித்தார் என்று கூறியுள்ளதாகத் தெரிகிறது. அவர் போலிசார்க்குக் கூறியதாவது:

"சேனதிபதி ஆங்ஸேனையும் அவருடைய சகாக்களான ஏனைய மந்திரிகளையும் கொலைசெய்யும்படி ஏவியது, முந்திய பிரதம மந்திரியான யூஸாதான். கொலையாளிகள் திரும்பியவுடன் வேலையைத் திருப்திகரமாகச் செய்தார்களா என்பதை யூஸா சோதித்தார். அவர் அரசாங்க மாளிகைக்கு ஓர் ஆளை அனுப்பி ஆங்ஸேனும் மற்றவர்களும் கொல்லப்பட்டுவிட்டார்களா இல்லையா என்பதைப் பார்த்துவரச் செய்தார்''.

யூஸா இப்போது சிறையில் வைக்கப்பட்டிருக்கிறர். அவருடைய 17 வயதான புத்திரியையும் போலிசார் சிறையில் வைத்துள்ளனர்.

துரித்த பயங்கரப் படுகொலைக்கும் பிரிட்டிஷ் அரசாங்கத்துக்கும் சம்பந்தம் ஏற்படுத்தி நாடெங்கும் பரப்பப்பட்டு வரும் வதந்திகளைச் சுத்தப்பொய் என்று பர்மா அரசாங்கம் ஓர் அறிக்கையை வெளியிட்டிருக்கிறது.


# யாழ்ப்பாணம் ஐக்கியலாபநிதி

1918-ம் ஆண்டு ஸ்தாபிதமானது.

வங்கிக்காரர் மூலநிதி 8 லட்சம் ரூபா.
இதுவரையிற் கொடுக்கப்பட்ட பங்குப் பண ரூபா
**134,3670**
**100 ரூபா விகிதமான 8000 பங்குகள்**

பங்குப்பணங் கட்டுமுறை.

மாசமொன்று 1 ரூபா விகிதமாக 75 மாசகாலத்திற்கு மாசந்தோறும் கட்டப்படவேண்டியது. குறித்த காலமுடிவில பங்கொன்றுக்கு ரூபா 100 திருப்பிக்கொடுக்கப்படும். பங்குகள் எந்த நேரமும் வாங்கலாம்.

தினசரிப் பற்றுவரவு

எச்சமிதி சராசரி 500 ரூபாவுக்குக் குறையாமல் இருக்குமானல் ஒரு விகித வட்டியுடன் தினசரிப் பற்றுவரவு செய்யலாம்

தவணை வரையறுக்கப்பட்ட க்ஷேமப்பணம்

க்ஷேமப்பணம் 3 மாசம், 6 மாசம், 9 மாசம், 12 மாசம் என்னும் காலங்கள் வரையறுத்து ஏற்படும் வட்டியும் முறையே 1 விகிதம், 2 விகிதம் 4 விகிதம் 6 விகிதமாகக் கொடுக்கப்படும்.

உண்டியல்கள்

கொழும்பிலுள்ள "நாஷனல்" வங்கியிலும் "இம்பீரியல்" வங்கியிலும் இந்தியாவிலுள்ள பிரதான பட்டினங்களிலும் மாற்றத்தக்க விதமாகக் கொடுக்கப்படும். தொடுவாய் இராச்சியப் பகுதியிலுள்ளவர்களுக்குக் கொடுக்கவும் வாங்கவுமான விசேஷ ஒழுங்குகள் செய்யப்பட்டிருக்கின்றன.

இந்தியாநோட்டு வட்டத்திறகு மாற்றிக்கொடுக்கப்படும்.

கடன்.

நகைகள் ஈடுவைத்துக்கொண்டு கடன் கொடுக்கப்படும். வட்டி 9 விகிதம் அறவிடப்படும். (இடுவைத்தவர்கள்) முதலையும் பாகம்பாகமாகக்கொடுக்கலாம். இன்னும் வேண்டிய விபரங்களை என் மூலமாக அறிந்துகொள்ளலாம்

S. கனகசபை
சிறுப்பர்.

14 20-1-46—20 11-7 (தி)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கந்தபுராணக் கவி நுட்பம்

## திருவிளையாட்டுப் படலம்

வித்துவசிரோமணி ந. ச. பொன்னம்பலப்பிள்ளை யவர்கள் வாய்க் கேட்டெழுதப்பெற்ற பிரதியிலிருந்து எடுத்த அரும் பெருங் குறிப்புக்கள் இப் [ ] பகரக் குறியீட்டுடன் வெளிபிடப்பட்டுள்ளன.

சிலபகல் பின்னும் வைகுந் திறத்திய லாயுள் கொண்டே
யுலகினி லவுணர் யாரு முறைதலி னவர்க்குத் தன்மெய்
நிலைமைகாட் டாது செவ்வே ணிலாவலு நேடி யன்னோர்
மலரயன் றேரியா வண்ணன் மாயமே யினைய தென்றார்

உலகத்திலுள்ள அசுரர்களெல்லோரும் பின்னருஞ் சில காலம் வாழ்தற்காகிய ஆயுளையுடையரா யிருத்தலின், முருகக் கடவுள் அவ்வசுரருக்குத் தமது திருமேனியி னியல்பைப் புலப்படுத்துதலின்றி உலாவி வருதலும், அவ்வசுரர்கள் யோசித்து இது தாமரைப்பூவில் வசிக்கும் பிரமாவிற்குந் தேடிக்காண்டற்கரியவராகிய பரமசிவனுடைய மாயத் திருவிளையாடலாகுமெனத் துணிந்தனர் என்பது கருத்து.

செவ்வேணிலாவலும் - செவ்வேள் + நிலாவலும். அண்ணன்—அண்ணலென்பதன் போலி — பெருமையிற் சிறந்தவர்; பிரமா முதலிய தேவர்கள் இங்ஙனஞ் செய்தல் இயலாதாதலின் அவர்கட் கெல்லாம் மேலான பரமசிவனே இவ்வாறு ஆடல் செய்கின்றனரெனத் தேவர்கள் அயிர்த்தார்களென்றபடி.

[குமாரசுவாமி தமது திருவுருவத்தைச் சூரன் முதலிய அசுரர்கட்கு அப்போது காட்டினால் அவர்கள் வந்து குழுமிப் பொருவர். அங்ஙனம் அவரோடு பொருது அவரை வதைபுரிந்தால், தமது பிதாவாகிய சிவபிரான் நூற்றெட்டு யுகங்கட்கு இருப்பீரெனச் சூரபன்மன் முதலிய அசுரர்க்கு அந்நாள் அளித்த வரம் தவறுமேயென்ற காரணம் பற்றித் தமது திருவுருவத்தின் நிலையை அவ்வசுரருக்குக் கட்டாது உலவினர்; சிலபகல் பின்னும் வைகும் என்றதனாலே அசுரர்க்கு அழிவு காலம் சமீபித்துவிட்டதென்பது புலப்படலாயிற்று.] (32)

ஆயதோர் குமரன் செய்கை யவனியின் மாக்கள் காணுத்
தீயன முறையால் வெங்கோல் செலுத்திய அவுண ரெல்லாம்
மாய்வது திண்ணம் போலு மற்றதற் கேது வாக
மேயின விம்மி தங்கோ லிதுவென வெருவ லுற்றார்

இப்பூவுலகத்திலுள்ள மக்கள் குமாரக்கடவுள் செய்யும் அத் திருவிளையாடலைக் கண்டு, தீயவழியிலேயே கொடுங்கோல் செலுத்திய அசுரர்களெல்லாரும் (விரைவிலே) அழிவது நிச்சயம்போலும். இவ்வேறுபாடான நிகழ்ச்சி அந்த அழிவிற்குக் காரணமாகத் தோன்றிய உற்பாதம் போலும் என்று அச்சமடைந்தார்களென்பது கருத்து.

முருகக் கடவுள் செய்யுந் திருவிளையாடல்களைக் கண்டு அசுரர்கள் கொண்ட மயக்கத்தை மேலுள்ள இரு திருவிருத்தங்களாலும் கூறி, பூவுலக மக்கள் கொண்ட மயக்கத்தை இத்திருவிருத்தத்திற் கூறியவாறுபோ? அடுத்துள்ள திருவிருத்தங்களினால், குமாரவேள் திருவிளையாடலைக் கண்ட தேவர்கள் கொண்ட மயக்கமும் செய்த செயலும் அடைந்த பயனுங் கூறப்படும்.

[விம்மிதம் - தீச்சகுனம்] (33)

புவனியின் மாக்க ளின்ன புகறலுந் திசைகாப் பாளர்
தவனனே மதிய மேனோர் சண்முகன் செய்கை நாடி
அவனுரு வதனைக் காணா ரவுணர்தம் வினையு மன்றால்
எவரிது செய்தார் கொல்லென் றிரங்கினர் யாருங் கூடி

பூவுலகினுள்ள மனுடர் இப்படிப் பேசுதலும், திக்குப் பாலகர்களும் சூரியனும் சந்திரனும் ஏனையோரும் சண்முகத் தெய்வத்தின் திருவிளையாடல்களைக் கண்டும் அப்பெருமானுடைய திருவடிவத்தைக் காணாதவரானமையின், இது அசுரர்செயலுமன்று, எவர் இப்படிச் செய்கின்றார் என்று எல்லோருஞ் சேர்ந்து கவலையுற்றனரென்பது கருத்து.

ஏனோ ரென்பதற்கு ஏனைய கிரகங்கள் தேவர்கள் முதலானோ ரெனக; வரத்தாற் பெரியாராயினும் அசுரர் இப்படியான செயற்கருஞ் செயலைச் செய்யவியலா ரென்றாராகலின் "அவுணர்தம் வினையு மன்றால்" எனப்பட்டது (34)

தேருறு மனைய தேவர் தேவர்கோ னொன் சிலவ ரோடும்
மேருவி லிருந்தான் போலும் வேதனு மங்கண் வைகும்
ஆருமங் கவர்பா லேகி யறைகுது மென்று தேறிச்
சூர்கோன் றனக்கு மஞ்சித் துயரோடு பெயர்த லுற்றார்

இங்ஙனம் ஆராயத் தொடங்கிய அத்தேவர்கள், தங்களரசனாகிய இந்திரன் சில தேவர்களுடன் மேருமலையின் கண்ணே இருக்கின்றான் போலும், பிரமதேவரும் அம் மேருமலையிற்றான் இருக்கிறார், நாமெல்லோரும் அவ்விருவரும் இருக்குமிடத்திற்குப் போய் (இச்செய்தியை) முறையிடுவோமென நிச்சயித்து, சூரபன்மனுக்குப் பயந்து கவலையோடு போவாராயினரென்பது கருத்து.

அம்மாறுதல்களைச் செய்தார் யாரென்பதைத் தீர்க்கமாக நிச்சயிக்க வியலாது பின்னரும் யோசிக்கின்ற தேவராதலின் 'தேருறு மனையதேவர்" என்றார். போலும் என்பது சந்தேகத்தை யுணர்த்தி நின்றது: சூரபன்மனுக்குப் பயந்து தன் நாடு நகரை விட்டுத் தேவியோடுஞ் சில தேவர்களோடும் கரந்து சென்ற இந்திரன் மேருமலையிலேதான் இருக்கின்றானென்பதை நிச்சயித்தறிதல் இயலாதாக, ஒருவாறு யூகித்துக் கூறினாராதலின் "தேவர்கோன் .... .... மேருவிலிருந்தான் போலும்" என்றனரெனக; பிரமதேவர் மேருமலையிற்றான் இருக்கிறாரென்பது நிச்சயமாதலின் 'வேதனும் அங்கண் வைகும்" என்றார்; மேரு மலையை நோக்கிச் செல்லுமிடத்துச் சூரபன்மன் கட்டளைப்படி அசுரர்களால் தமக்கு யாதாயினும் இடையூறு நேருமோ எனப் பயந்து செல்வாராயினரென்பார் "சூர்கோன் றனக்கு மஞ்சித் துயரோடு பெயர்தலுற்றார்" என்றார்; ஒருபுறத்தே முருகவேள் செய்யுந் திருவிளையாட்டினால் யாதும் அநர்த்தம் தமக்கு நேருமோ என்றபயம், இன்னொரு புறத்தே, இந்திரன் பிரமனென்னு மிருவருக்கும் அவ்வநர்த்தத்தை முறையிடச் செல்லும் மார்க்கத்திலே சூரபன்மன் முதலிய அசுரர்களால் தமக்கு ஏதும் ஆபத்து விளையுமோ என்ற அச்சமாகிய இரண்டும் அத்தேவர்களுக்கு நேர்ந்தமையைக் குறிக்கின்றமையின் சூர்கோன் தனக்கு மஞ்சியென றதிலுள்ள உம்மை எச்சவும்மையாம். (35)

# ஒத்துழைப்பு வேண்டும்

## ஸ்ரீ மகாதேவாவின் வேண்டுகோள்

சென்ற ஞாயிற்றுக்கிழமை வடமராட்சிக் கடலேரித் திட்டத்தை அங்குரார்ப்பணம் செய்து வைக்கையில் உள்நாட்டு மந்திரி கௌரவ அ. மகாதேவா தமிழ்மக்கள்பெரும்பான்மைச் சமூகத்தாருடன் ஒத்துழைக்கவேண்டியதன் அவசியத்தை வற்புறுத்திப் பேசினார்.

வல்லையில்மேற்படிதிட்டத்தை ஸ்ரீ மகாதேவா ஆரம்பித்து வைத்தபின் அச்சுவேலி அமெரிக்கன்மிஷன்பாடசாலை மண்டபத்தில் ஓர்பொதுக்கூட்டம் நிகழ்ந்தது. அக்கூட்டத்தில் திரு. மகாதேவா பின் வருமாறு பேசினார்:

"இத்திட்டத்தினால் வட மாகாண மக்கள் பெருநன்மையடைவர் என்பது நிச்சயம். 15,000 ஏக்கர் நிலம் திருத்தி விவசாயம் செய்யப்படும். இதில் 8500 ஏக்கர் நெல் விளைவுக்கும் மீதி வெங்காயம் முதலிய தானியங்கள் விளைவிக்கவும் பயன்படும். ஆண்டுதோறும் 30 லட்சம் ரூபா பெறுமதியான தானியங்கள் இந்த 15000 ஏக்கர் நிலத்திலிருந்தும் விளையும் என அறிகிறேன்.

"இந்தச் சந்தர்ப்பத்தில் வடபகுதித் தமிழ்மக்களுக்கு யான் கூறக்கூடியது ஒன்றுண்டு. நாங்கள் இலங்கைவாழ் சகல மக்களுடனும் ஒத்துழைக்க வேண்டும். அப்படி ஒத்துழைத்தால், அவர்களுடன் வீண் வாதம் புரியாவிட்டால் எமக்கு வேண்டிய சலாக்கியங்களை நாம் மிகவும் இலகுவிற் பெறலாம்.

"இலங்கை மந்திரசபையில் நான் ஒருவன்தான் தமிழன்; ஆனால் எங்களுடைய நலனுக்கு வேண்டியவற்றைப் பெற நான் ஒருபோதும் கஷ்டப்பட்டதேயில்லை; ஏத்தால் வாழலாம்? ஒத்தால் வாழலாம்! நாங்கள் எல்லாரும் ஓர்தாய் பிள்ளைகள்போல வாழ்வோமாக. அப்படி வாழ்ந்தால் தான் தமிழ்மக்களும் இலங்கையும் ஈடேறமுடியும்.

'இந்த அங்குரார்ப்பண விழாவை மிஸ்டர் சேனநாயக்காவே நிகழ்த்துவது என முன்னர் ஏற்பாடாகியிருந்தது. ஆனால் அவர் பல சந்தர்ப்பங்களில் இங்குவர முடியவில்லை; எனவே அவர்க்குப் பதிலாக நான் இந்த விழாவை ஆரம்பித்துள்ளேன். ஆனால், அவர் இங்கே வந்திருந்தால் அவர்க்கு மகோன்னத வரவேற்பு அளிக்கப்பட்டிருக்கும் என்பதே எனது நம்பிக்கை. இப்போது சிங்களர்க்கும் தமிழர்களுக்கு மிடையேயுள்ள நேசபான்மை இன்னும் ஓங்கி வளருமாக."

# இலங்கையின் உணவு நிலை

## சீனித்தட்டுப்பாடு நீடிக்கலாம்

இப்போது இலங்கையில் 6 வாரத்துக்குப் போதிய அரிசி இருப்பில் இருக்கிறது. இதனைவிட, இன்னும் சிலதினங்களில் இரண்டு கப்பல் அரிசி வரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

மாவின் நிலைமை மிகவும் திருப்திகரமாகவிருக்கிறது. 5 கிழமைக்குப் போதிய மா இருப்பில் இப்போது உண்டு. இதனைவிடச் சென்ற வெள்ளிக்கிழமை 2000 தொன் மா ஓர் கப்பலில் இறக்குமதியாயிருக்கிறது. இன்னும் 4 கப்பல் மா கூடிய சீக்கிரத்தில் வருமென எதிர்பார்க்கப்படுகிறது.

சீனி நிலைமை திருப்திகரமாயில்லை. சென்றவாரம் ஆளொருக்கு அரை இறாத்தலென்றிருந்த அளவு கால் இறாத்லாகக் குறைக்கப்பட்டது. இந்தவாரத்தில் அந்தக் குறைவையும் சரிப்படுத்தி, வழக்கமான விநியோக அளவைக் கொடுக்க முடியுமென முன்னர் எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் எதிர்பார்த்தபடி சீனிக்கப்பல்கள் வரவில்லை. ஆகஸ்டு மாதம் 28-ந் திகதிதான் சீனிக்கப்பல் வருமென இப்போது எதிர்பார்க்கப்படுகிறது. அதுவரை இந்தக் குறைந்த அளவு சீனியுடனேயே ஊரவர்கள் திருப்திப்படவேண்டியது.

# மண்டைதீவில் பொதுக் கூட்டம்

சென்ற 23-7-47 புதன்கிழமை மாலை 5 மணியளவில் மண்டைதீவு கார்த்திகேய வித்தியாசாலை மண்டபத்தில் முதலியார் J. N. குழந்தைவேலு அவர்கள் தலைமையில் ஓர்கூட்டம் கூடிற்று. மண்டைதீவு, அல்லைப்பிட்டி, மண்கும்பான், சரவணை, வேலணை, நாரந்தனை ஆகியாம இடங்களிலிருந்து பெருந்திரளான வாக்காளர்கள் சமுகமளித்தார்கள். அவ்வூர் வாசிகளில் பலரும், மற்றும் பாகங்களிலுள்ளாரும் சேர் வை. துரைசுவாமி அவர்களை ஆதரித்து. அவர்கள் அத்தொகுதிக்கு ஆற்றிய பணிகளை விபரித்துச் சொற்பொழிவுகள் நிகழ்த்தினர் பின் சேர் வை. துரைசுவாமியவர்கள் பேசியதும். ஈற்றில் தேவாரபாராயணத்துடன் கூட்டம் இனிது நிறைவேற்றதென அறியலானோம்.


# தேவை

சகல விதமான நகை வேலைகளிலுந் தேர்ச்சி பெற்ற பத்தர்மார்கள் மாதச் சம்பளமாகவோ கம்மிஷனாகவோ வேலை செய்ய விரும்புகிறவர்கள் கீழ்க்கண்ட விலாசத்திற்குத் தங்கள் தங்கள் முக்கிய அனுபவமான வேலைகளைப்பற்றிய தகவல்களுடன் எழுதவும். 40 வயசுக்கு மேற்பட்டவர்கள் தேவையில்லை. தேவைப்பட்டவர்களுக்கு வருவதற்குரிய பேமிற் அனுப்பலாம்.

நேதாஜி டயமெண்ட் கம்பெனி
162 ஈப்போ ரோட்
சேண்டுல், கோலாலம்பூர்.
தந்தி: "நேதாஜி" கோலாலம்பூர்
Mis 77 7-7-47 to 5-8-47.

# தமிழ்
# ஆசிரிய தராதரப்பத்திரப் பரீட்சை

ஆசிரியர் போதனாகல்லூரி
அசிரியர்களால் வகுக்கப்பட்ட
பாடத்திட்டம்

முதலாம் அல்லது இரண்டாம் பகுதி
முதலாம் பாடம் ரூபா 7 50
அடுத்த ஒவ்வொரு பாடத்துக்கும் 5 00

அற்லஸ் ஹால்
தபாற் பெட்டி இல. 649
கொழும்பு

Std 19 15-7 — 25-8-47 (செ)

# அறிவித்தல்

**வில்வந்தெரு மரக்காலை, கச்சேரியடி**
**புங்கம்குளம்ரேட்டு, சிவியாதெரு, யாழ்ப்பாணம்.**

எமது மரக்காலையில் எல்லாவிதமான பலகைகளும், தீராந்திகளும், றீப்பைகளும், பனைமரங்களும், சிலாகைகளும், வேப்பங்கப்புகளும், விறகுகளும், கோத்தின சிராய்களும், சகாயமான விலைக்கு கொடுக்கப்படும்.

*அகலம் கூடின வேப்பம் பலகைகளும், வண்டில் அச்சுக்குத்திகளும் ஏராளமாயிருக்கின்றன.*

"ஓடருக்கும்" சொல்லப்பட்ட தவணைக்குச் சொல்லப்பட்ட சாமான்கள் தயாராக்கிக் கொடுக்கப்படும்

**நிலைகள், யன்னல்கள், கதவுகள், அலுமாரிகள், கட்டில்கள், வாங்குகள், மேசைகள், ஞக்கைகள் எல்லாம் சகாயமான விலைக்குக் கொடுக்கப்படும்.**

யாழ்ப்பாணம் கச்சேரிக்கு அருகாமையிலுள்ள புங்கங்குளம் "சயிடிங்கில்" கோச்சுகள் நிற்பாட்டப்படுகிறபடியால் போக்குவரவு வசதிகள் இருக்கின்றன

மரக்காலையும் புங்கங்குளம் சயிடிங்குக்கருகிலேயே இருக்கின்றன மெயின்ரேட்டும் அருகிலே இருக்கிறபடியால்

பஸ்சாலும் போக்குவரவு செய்யலாம்

**V. P. மூலமாயும் சாமான்கள் அனுப்பலாம்**

யாழ்ப்பாணம், 17-7-47 — இப்படிக்கு, A. K. பொன்னையா அல்லது இராசையா.

Mis 94 25. 29-7-47.



# பசந்த லேகியம்

இதனால் மூலச்சூடு, இருமல் பித்தப் பாண்டு, குன்மவாய்வு, நெஞ்செரிவு, கைகால் வலி, அசதி, அஜீரணம், வயிற்றுப் பொருமல், புளித்த ஏப்பம், மலச் சிக்கல், பீனிசம், பார்வைக் குறைவு, வெள்ளை, சூலை, சந்து வாய்வு, பிரமேகம் முதலிய வியாதிகள் சூரியனைக் கண்ட பனிபோல் நீங்கும். இந்திரியம் கட்டுப்பட்டு, தேக புஷ்டி, வஜீகரம், பலம் முதலானவை உண்டாகும்.

ஸ்திரீகளுக்குண்டாகும் பிரதானமான வியாதியாகிய சூதகக்கட்டு, பிரசவத்தால் உண்டாகும் பல கொடிய உபத்திரவங்கள் தீர்ந்து மாதவிடாய் குறைந்து அல்லது அதிகமாய்க்காணுதலால்நேரிடும் பல நோய்களும் தீர்ந்து, தேகத்துக்குப்பலம் உண்டாக்கும்.

ஒருறாத்தல் விலை ரூபா 25
அரைறாத்தலுக்கு ரூபா 12-50
கால்றாத்தல் ரூபா 6-25

விலாசம்:

**க. ஆறுமுகம்பிள்ளை**

இ. 156, செக்கடித்தெரு கொழும்பு

Std. 1. 26—3—47 to 1—4 48



# கந்தசாமி வைத்தியர்
## அமிர்த சர்க்கரை லேகியம்

தாதுவிருத்தி யுண்டாகி நரசிங்கம் போன்ற தேக பலத்தைத் தருவதில் இணையற்ற லேகியம். நெடுநாட்பட்ட வாதங்கள் எவற்றையும் தீர்க்கும். பித்தக் கிறுதி பாண்டு குன்மம் நித்திரையின்மை மூளைக் குழப்பம் இருமல் அரிகுரல் குடற்புண் மலக்கட்டு மூலவாய்வு அசீரணம் இவைகளை மாற்றி நல்ல பசி உண்டாக்கும். மேகம் மேகத்தடிப்பு நீரழிவு நீர்க்கடுப்பு நீக்கும். கெற்பணிகட்கு உண்டாகும் வாந்தி அரோசியம் இருமல் மலசலக்கட்டு நீக்கும். கருவை அழியாமல் காக்கும். பாலர்கட்கு கணை பாண்டு இராக்காய்ச்சல் இருமல் தீர்க்கும் இணையற்ற சஞ்சீவி.

பெரியவர்கள் காலை மாலை 1 கழஞ்சு வீதம். சிறியவர்கள் கால் கழஞ்சு அரைக்கழஞ்சு வீதமும் சாப்பிடலாம்

**கால் றாத்தல் விலை ரூபா 5-00**

வீ. பீ. பி யில் அனுப்புவோம்.

விலாசம்:

**ஆயுள்வேத சிவசோதி மெடிக்கல்ஹோல்**
-- வல்வெட்டித்துறை —

Std .5 1-7-47—30-6-48 (செ)



# விளம்பரம்

யாழ்ப்பாணம் பெரியதெருவில், அநுமதிபெற்றுப் பல்வைத்தியம், கண் வைத்தியம் செய்துவரும் நான், பழையபடி இரு வைத்தியங்களையும் தொடங்கி நல்லமுறையில் நடத்திவருகிறேனென்பதையும், கட்டார் வைக்குரிய கண்ணாடி முதலிய பொருள்களையும், செய்கைப்பல், செயற்கைக்கண் முதலிய பொருள்களையும் இப்பொழுது போதிய அளவு தருவித்திருக்கிறேனென்பதையும் இந்த வடமாகாணத்துள்ள மக்களுக்குத் தெரிவிப்பதோடு, என்னை அபிமானிக்கும்படியும் அவர்களைக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

| | |
|---|---|
| யோசித்தற்குரிய நேரம் நாள்தோறும் | காலை 9 மணிதொடக்கம் 12 வரை<br>மாலை 2 ,, 5 ,, |

Tst 28 11-7—10-10-47. **S. சார்ல்ஸ்பத்திராஜு.**


# இந்துசாதனம்
## ஆங்கில-தமிழ்ப் பிரசுரங்கள்

**பத்திரக்கிரயம் (முற்பணமாக ஒருவருடத்திற்கு)**

| | யாழ்ப்பாணப்பட்டின எல்லைக்குள். | வெளியூர். | மலாய்நாட்டுக்கு |
|---|---|---|---|
| | ரூ. ச. | ரூ ச. | ரூ ச |
| இந்துசாதனத் தமிழ்ப் பிரசுரம் | 6—50 | 9—50 | 10—50 |
| இந்துசாதன ஆங்கிலப் பிரசுரம் | 6—50 | 9 50 | 10—50 |
| இரு பிரசுரங்களுஞ் சேர்ந்து | 10—50 | 13—50 | 15—00 |

பத்திரக்கிரயம் முதலிய பண விஷயம் எதுவும், இந்துசாதன மனேஜருக்கே அனுப்பப்படல் வேண்டும்.

மனேஜர், இந்துசாதனம், வண்ணார்பண்ணை.


# சிறந்த சங்கீதக் கச்சேரி

**யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரிக் கட்டடநிதியின்பொருட்டு**

இந்திய தேசியராணுவப் பெண்கள்பகுதிக் காரியதரிசியாகிய

**குமாரி S. N. சரஸ்வதியும்**

அவர் கோஷ்டியினரும்

1947-ம் ஆண்டு ஆகஸ்டுமீ 2ந் உ சனிக்கிழமை இரவு 7 மணி தொடக்கம்

**யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி மண்டபத்தில்**

நீதியரசர் கௌரவ ஸ்ரீ

**C. நாகலிங்கம் அவர்கள் அநுசரணையில்**

*சிறந்த சங்கீதக்கச்சேரி நடத்துவர்*

சங்கீத ரசிகர்கள் இவ்வருந்தருணத்தை இழந்துவிடாது சமுகஞ்செய்க

Mis 88 18-1-8-47.



# சென்னையிலிருந்து கப்பல் பிரயாணம்
## மலேயாவுக்கு உங்கள் பிரயாணம் நிச்சயமா ?

எம்மால் சென்ற சில மாசங்களாக நாகபட்டணம் மார்க்கம் ஏற்பாடாகியிருந்த பிரயாண வசதிகள் கப்பல்வரை திருப்திகரமா யிருந்தும் கப்பலில் வசதியீனங்களை யுணர்ந்து எமது நண்பர்கள் சௌகரியத்துடன் குடும்ப சமேதராகப் பிரயாணஞ் செய்வதற்கு ஏற்ற வசதிகளடங்கிய கப்பல் மாசம் ஒருமுறை சென்னையி லிருந்து புறப்படுவதற்கேற்ற ஒழுங்குகளைக்கூடுவதை அறியத்தருவதுடன் எம்மிடம் எந்த நேரங்களிலும் விபரம் பெறுதற்கேற்ப ஓர்காரியாலயம் ஸ்ரான்லிரேட்டில் நிறுவப்பட்டிருக்கிறது.

முன்போல் நாகபட்டணம் மார்க்கமும் வசதிகள் செய்யப்படும்

**எஸ். ஆர். எஸ். நாதன்**

21/3, ஸ்ரான்லி ரேட் யாழ்ப்பாணம்

Std 23. 6-6-47—6-6-48


# திருச்சி ரேடியோ

புதன் யூலை 30

காலை 8 15 கீதாரம்பம் 7-20 தமிழில் செய்திகள் 7.30 காளையார் கோயில் எம் எஸ் ஷண்முகசுந்தரம் பாட்டு 8 ஆங்கிலத்தில் செய்திகள் 8-15 ரேடியோ வாத்யக் கோஷ்டி 8 30 டி வேணுகோபால் பாட்டு 9 முடிவு

1 கதம்பம் இசைத்தட்டு 1-30 ஆங்கிலத்தில் செய்திகள் 1-40 டி வேணுகோபால் பாட்டு 2 தமிழில் செய்திகள் 2 05 டி வேணுகோபால் பாட்டு 2.15 கல்வி ஒலிபரப்பு 2-45 முடிவு,

மாலை 5 வி சந்தானமய்யா வயலின் 5-40 இசைப்பயிற்சி 6 ஆங்கிலத்தில் செய்திகள் 6-10 அறிவிப்புகள் 6.15 கிராம நிகழ்ச்சிகள் 7 வஞ்சம் நாடகம் 7-15 இன்றைய பிரச்சினை 7 30 தமிழில் செய்திகள் 7-45 குரல்வகை 8 காளையார்கோயில் எஸ் எஸ் சண்முகசுந்தரம் பாட்டு 8-30 வி சந்தானமய்யா வயலின் 9 ஆங்கிலத்தில் செய்திகள் 9-15 ஆங்கிலப்பேச்சு 9-30 லண்டனிலிருந்து செய்திகள் 9.40 அறிவிப்புகள் வானிலை 9 45 ஐரோப்பிய சங்கீதம் இசைத்தட்டு 10-30 முடிவு.

வியாழன் யூலை 31

காலை 7-15 கீதாரம்பம் 7-20 தமிழில் செய்திகள் 7-30 என் எஸ் சந்திரசேகரன் பாட்டு 8 ஆங்கிலத்தில் செய்திகள் 8-15 கே எஸ் நாராயண ஐயங்கார் கோட்டுவாத்தியம் 8-30 கே ஆர் வி. ராமநாதசாஸ்திரிகள் பாட்டு 9 முடிவு

1 கதம்பம் 1-30 ஆங்கிலத்தில் செய்திகள் 1-40 என் எஸ் சந்திரசேகரன் பாட்டு 2 தமிழில் செய்திகள் 2-05 என் எஸ் சந்திரசேகரன் பாட்டு 2.15 கல்வி ஒலிபரப்பு 2.45 முடிவு.

மாலை 5 ஆர் ஷண்முகசுந்தரம்பிள்ளை வீணை 5-40 இசைப்பயிற்சி 6 ஆங்கிலத்தில் செய்திகள் 6-10 அறிவிப்புகள் 6-15 கிராம நிகழ்ச்சிகள் 7 சித்திரகானம் 7-15 செய்தி விளக்கம் 7-30 தமிழில் செய்திகள் 7-45 என் ஜி சீதாராமன் பாட்டு 9 ஆங்கிலத்தில் செய்திகள் 9 15 குரல்வகை 9-30 லண்டனிலிருந்து செய்திகள் 9-40 அறிவிப்புகள் வானிலை 9-45 ஆர் ஷண்முகசுந்தரம் பிள்ளை வீணை 10 30 முடிவு.

வெள்ளி ஆகஸ்ட் 1

காலை 7 15 கீதாரம்பம் 7-20 தமிழில் செய்திகள் 7-30 கே ராதாமணி பாட்டு 8 ஆங்கிலத்தில் செய்திகள் 8-15 திருச்சி வாத்யகோஷ்டி 8-30 எஸ் பி தில்லைராஜன் பாட்டு 9 முடிவு

1 கதம்பம் இசைத்தட்டு 1 30 ஆங்கிலத்தில் செய்திகள் 1-40 எல் சாரதா பாட்டு 2 தமிழில் செய்திகள் 2-05 எல் சாரதா பாட்டு 2-15 கல்வி ஒலிபரப்பு 2.45 முடிவு.

மாலை 5 கே ராதாமணி பாட்டு 5-40 குரான் ஷரீப் விளக்கம் 6 ஆங்கிலத்தில் செய்திகள் 6-10 அறிவிப்புகள் 6 15 கிராமநிகழ்ச்சிகள் 7 எஸ் பி தில்லைராஜன் பாட்டு 7 15 முன்னேற்றம் ஒலிச்சித்திரம் 7-30 தமிழில் செய்திகள் 7-45 நமது தபால்பெட்டி 8 பெரம்பலூர் என் அங்கப்பபிள்ளை நாகஸ்வரம் 9 ஆங்கிலத்தில் செய்திகள் 9-15 தென்னிந்தி நாட்டுப் பாடல்கள் 9-30 லண்டனிலிருந்து செய்திகள் 9-40 அறிவிப்புகள் வானிலை 9-45 வாத்ய இசை இசைத்தட்டு 10 நீங்கள் கேட்டவை இசைத்தட்டு 10·30 முடிவு.

வான்முகில் வழாதுபெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை யரசுசெய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்களோங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக வுலக மெல்லாம்.

Printed and Published by PANDIT V. T. SAMBANDHAN, residing at Vannarponnai West, Jaffna, for and on behalf of the Proprietors, the Saiva Paripalana Sabha, Jaffna, at their Press, the Saiva Prakasa Press Vannarponnai, Jaffna. on Tuesday, July. 29, 1947.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org